
Registered as a News paper in Sri Lanka


விலை ரூபா. 6.00




# வலம்புரி

## The Valampuri

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 ஆனி 25 புதன்கிழமை (09.07.2003) தொலைபேசி - 2223378 ஒலி 202




டாக்டர்களின் முயற்சியை விதி வென்றது,சோகத்தில் பெற்ற தாய். உலகமே கலங்கியது.

## ஒட்டிப் பிறந்தவர்களை வெட்டிப் பிரித்த போது இருவரும் உயிரிழந்தனர்

(சிங்கப்பூர்)

மருத்துவ உலகின் மகத்தான சாதனையாக உலகின் கவனத்தை ஈர்ந்திழுத்த தலையால் ஒட்டிப்பிறந்த ஈரானிய இரட்டைச் சகோதரிகளை தனித்தனியாக பிரிக்க மேற்கொள்ளப்பட்ட அறுவைச் சிகிச்சை தோல்வியில் முடிந்ததால் இரு சகோதரிகளும் உலகமே கண்ணீர் சிந்த பரிதாபகரமாக மரணமாகியுள்ளனர்.

29 வருடங்கள் உயிர் வாழ்ந்த ஈரானைச் சேர்ந்த லாதேன் மற்றும் லாலே ஆகிய தலையால் ஒட்டிப் பிறந்த சகோதரிகளே இவ்வாறு பரிதாபகரமான முறையில் நேற்று மரணமாகி உள்ளனர்.

சிங்கப்பூரில் உள்ள ராபில்ஸ் வைத்தியசாலையில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 28 அறுவைச் சிகிச்சை வைத்திய நிபுணர்கள் 100 மருத்துவ உதவியாளர்கள் ஆகியோரைக் கொண்ட (10ம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வனுடன் நேற்று நோர்வேத் தூதர் சந்திப்பு!

## முடிபுகள் எதுவும் எட்டப்படவில்லை

(நமது நிருபர்)

**இலங்கைக்கான முன்னாள் நோர்வேத்தூதுவர் ஜோன்வெஸ்பேர்க்கும்,தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்குமிடையே நேற்று சுமார் இரண்டு மணி நேரம் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற போதும் முடிபுகள் எதுவும் எடுக்கப்படாத நிலையில் பேச்சுவார்த்தைகள் முடிபுற்றதாக தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்கும்,சு.ப.தமிழ்ச்செல்வனும் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாகவும் நோர்வே அரசின் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் நேற்றுக் காலை 10 மணி முதல் ஜோன் வெஸ்பேர்க்குக்கும் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றது.

கிளிநொச்சியில் உள்ள சமாதான செயலகத்தில் இடம் பெற்ற இப் பேச்சுவார்த்தைகளில் நோர்வேயின் முன்னாள் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க்,நோர்வேத் தூதரக ஊடகப் பேச்சாளர் தோமஸ்ஸ்ராங்கலரும் விடுதலைப் புலிகளின் சார்பில் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலணியின் செயலாளர் புலித்தேவன்,ஜோர்ஜ், தொல்காப்பியன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை கொழும்பில் இருந்து உலங்கு வானூர்தி மூலம் வவுனியா வந்து சேர்ந்த நோர்வேயின் முன்னாள் தூதுவர் வெஸ்பேர்க் அங்கிருந்து ஏ-9 கண்டி வீதிவழியாக கிளிநொச்சியை வந்தடைந்தனர்.

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த அவர் கருத்துத் தெரிவிக்கையில்,சமாதானச் செயற்பாடுகளில் காணப்படும் குறைநிறைகள் பற்றியும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.பயன் உள்ளதாக இடம் பெற்ற இச்சந்திப்பின் போது பல விடயங்கள் பரிமாறப்பட்டன.

அத்துடன் வன்னிப் பிரதேசத்தில்

(10ம் பக்கம் பார்க்க)

### புலிகளின் முகாமை அகற்ற

## கண்காணிப்புக் குழுத் தலைவர் இன்று திருமலை செல்கிறார்

(கொழும்பு)

திருகோணமலை கிண்ணியாவில் குரங்குப் பாஞ்சான் காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் அமைத்துள்ள முகாமை அகற்றுவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலிவ்சன் இன்று திருகோணமலைக்குச் செல்கிறார்.

திருகோணமலை செல்லும் ரெலிவ்சன் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களையும் இராணுவத்தினரையும் சந்தித்து முகாம் அகற்றுவது தொடர்பாக பேசவுள்ளார்.

இதேவேளை,கோபால புரத்தில் கடற்படையினரால் அமைக்கப்பட்டுள்ள முகாம் அகற்றப்பட்டாலேயே கிண்ணியா குரங்குப் பாஞ்சான் காட்டுப் பகுதியில் உள்ள தமது முகாமை அகற்றுவோம் என்று விடுதலைப் புலிகள் நிபந்தனை விதித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வன்னிக்குச் சென்று விடுதலைப் புலிப் பிரமுகர்களைச் சந்திக்கவுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(வ)

## கைக்குண்டுடன் இளைஞர் இருவர் மட்டக்களப்பு பொலிஸாரால் கைது

(மட்டக்களப்பு)

காயான்கேணிப் பகுதியில் கைக்குண்டுகளுடன் நடமாடிய இரண்டு இளைஞர்களை மட்டக்களப்புப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பிரசாந் என அழைக்கப்படும் வடிவேல் சந்திரகுமார்,குலதீபராஜ் எனபபடும் பயஸ் இராஜேந்திரா ஆகிய இருவருமே கைது செய்யப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் விடுதலைப் புலி உறுப்பினர்களென்று வாழைச்சேனைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த பிரஸ்தாப இளைஞர்களை வழி மறித்து சோதனை செய்த போது கைக்குண்டுகள்

(10ம் பக்கம் பார்க்க)

## இடைக்கால சபை சட்டவரைபு மேலும் தாமதமாகும்!

(கொழும்பு)

தமிழழ விடுதலைப் புலிகளுக்கு கையளிக்கப்படவென அரசினால் தயாரிக்கப்பட்டு வரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு சட்ட நகல் வரைபு மேலும் காலதாமதமாகலாமென்று அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பில் முஸ்லிம் மக்களின் நிலை தொடர்பாக சர்ச்சை எழும்பியுள்ளதால் சட்ட நகல் வரைபில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது இந்நிலையில் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனியான ஒரு வரைபைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதால் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பான இறுதி வரைபைத் தயாரிப்பதில் கால தாமதம் ஏற்பட்டு வருவதாக பிரதமரின் சமாதான செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ம)

## இராணுவ புலனாய்வு அதிகாரிகள் புலிகளாலேயே சுடப்பட்டனர்

### பாராளுமன்றில் அமைச்சர் மாரப்பன

(கொழும்பு)

அண்மைக்காலங்களில் இராணுவ புலானாய்வுத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளில் பலர் கொல்லப்பட்ட சம்பவங்களில் பெரும்பாலனவை விடுதலைப் புலிகளினாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

இராணுவப் புலானாய்வுப் பிரிவு அதிகாரிகள் விடுதலைப் புலிகளினால் சுட்டுக் கொல்லப்படும் போது அது

(10ம் பக்கம் பார்க்க)

## மோப்ப நாய்களின் உதவியுடன் பாராளுமன்றக் கட்டடம் சோதனை

(கொழும்பு)

பாராளுமன்ற சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவின் உத்தரவுகளின்படி பாராளுமன்ற கட்டடத் தொகுதி முழுவதும் பாதுகாப்புச் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. சபை முதல்வர் டபிள்யு.ஜே.எம். லொக்கு பண்டார விடுத்த வேண்டுகோளுக்கமையவே நேற்று முன்தினம் மேற்படி சோதனை நடவடிக்கைகள் நடைபெற்றன.

குழு அறைகள்,கட்டடத்தின் பல்வேறு பகுதி அறைகள்,பிரதமர், எதிர்க் கட்சித் தலைவர் ஆகியோரின் அலுவலகங்கள்,எம்.பிகளின் லொக்கர்கள் உட்பட அனைத்து இடங்களும் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனை செய்யப்பட்டன.

அண்மைக்காலத்தில் பாராளுமன்றத்தில் பல விரும்பத்தகாத சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. மிக அண்மையில் பொ.ஐ.மு, ஜே.வி.பி எம்.பிக்கள் சிலர் பாராளுமன்றத்தினுள் ஒரு சவப்பெட்டியைக் கடத்திக் கொண்டு வந்திருந்தனர். சிலகாலம் முன்னதாக மலர்வளையம் ஒன்று உள்ளே கொண்டு வரப்பட்டிருந்தது.1987-ல் பாராளுமன்றக்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஸ்ரீ.சு.க - ஜே.வி.பி.

# கூட்டமைப்பை ஆதரிப்பது பற்றி தேசிய ஐக்கிய முன்னணி பரிசீலனை

## எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே ஏற்படவுள்ள கூட்டமைப்பை ஆதரிப்பதா? இல்லையா? என்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கலந்துரையாடிய பின்பே முடிவு எடுக்கப்படும் என தேசிய ஐக்கிய முன்னணியின் உப தலைவர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் அம்பாறை மாவட்டக் கரையோரப் பிரதேசங்களை வழங்குவதற்கும், அதிகாரப் பரவலாக்கல் தீர்வினையும் ஜே.வி.பி.எதிர்த்து வருகிறது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமானால், அதிகாரப் பரவலாக்கல் அத்தியாவசியமானது,

மக்கள் விடுதலை முன்னணியின் இவ்வாறான நடவடிக்கையினால், வடகசு, கிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களுக்கு பாரிய இழப்பு ஏற்படும்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டமைப்புப் பற்றி பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என ஜனாதிபதி அறிவித்திருந்த போதிலும தமது கட்சியுடன் இதுவரை எவ்வித பேச்சு வார்த்தைகளும் நடத்தப்படவில்லை.

எனவே, இது தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின்னரே கூட்டமைப்பினை ஆதரிப்பது பற்றிய இறுதி முடிவு எடுக்கப்படும். அதிகாரப் பரவலாக்கலை மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்தும் எதிர்த்து வருமேயானால், இவ்விரு கட்சிகளின் கூட்டமைப்பை அங்கீகரிக்கமுடியாது. அத்துடன் பொ.ஜ. முன்னணி. தேசிய ஐக்கிய முன்னணி தொடர்ந்து அங்கம் வகிப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் எனவும்அவர் மேலும்தெரிவித்துள்ளார். (தி)

# நீர்வெறுப்பு நோயை முற்றாக ஒழிக்க துரித நடவடிக்கை

**நீர்வெறுப்பு நோயை இல்லாதொழித்தல் தொடர்பாக உள்நாட்டலுவல்கள் மாகாணசபையின் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கே.பி.எம். ஸ்பெல்ட்வின் சகல மாகாண சபையின் பிரதம செயலாளர்களுக்கும் அனுப்பிவைத்துள்ள அவசர அறிவுறுத்தல் கடிதம்.**

இலங்கையில் பல மாகாணங்களில் நீர்வெறுப்புநோய் பரவுதல் வரவரஅதிகரித்து வருகின்றது. இந்நிலை மேலும் தொடருமானால், இது ஒரு பாரிய சமூக பிரச்சினை யாவதற்கான சாத்தியமுண்டு. இலங்கை போன்ற ஒரு தீவில் நீர்வெறுப்புநோயை முற்றாக ஒழிப்பதற்கு அது தொடர்பான நடவடிக்கைகளை மிகவும் தீவிரமாக மேற்கொளள வேண்டியுள்ளது. ஆகவே, நீர் வெறுப்பு நோய்க்கு காரணியாகவுள்ள கட்டாக்காலி நாய்களின் பெருக்கத்தை முறையாகக் கட்டுப்படுத்துவதற்கு நீர்வெறுப்புநோய்ச் சட்டத்தையும். நாய்கள் பதிவுசெய்யும் சட்டத்தின் ஒழுங்கு விதிகளையும் அமுல்படுத்துமாறு தங்கள் பகுதியில் உள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்களுக்கும் ஆலோசனை வழங்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நீர் வெறுப்பு நோயைக் கட்டுப்படுததும் பொறுப்பு சுகாதார திணைக்களத்தைச் சார்ந்ததாயினும் அந்நோய் பரவுவதைத் தடுப்பதற்கான ஆரம்ப நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மேற்குறிப்பிட்ட சட்டங்களின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவன அதிகாரிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்பதனை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 476ஆம் அத்தியாயமான நீர் வெறுப்பு நோய் சட்டத்திலும் (Chapter 476 - Rabies ordinance) 477ஆம் அத்தியாயமான (Chapter 477 - Dog Registration ordinance) நாய்கள் பதிவுசெய்யும் சட்டத்திலும் இக்கொடிய நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் விரிவாக சட்டரீதியாக்கப்பட்டுள்ளது. இதைவிட இச் சட்டங்களின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றங்களைப் போல் மாகாண சபைகளின் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரும் நீர்வெறுப்பு நோய் உண்டாவதைத் தடுப்பதற்கான அவசிய ஒழுங்கு விதிகளை மேற்கொள்ளவும், உபவிதிகளை சட்ட அமுலாக்கம் செய்யும் அதி காரமும் வழங்கப்பட்டுள்ளது.

எப்படியாயினும், அப்படியான சட்ட அமுலாக்கம் தொடர்பில் போதிய அளவு செயற்பாடின்மையும் அவற்றை நடைமுறைப்படுத்தும் செயற்பாடு மிகவும் குறைந்த அளவிலும், உத்வேக மின்மையாக நடைபெறுவது மிகவும் அதிருப்திகரமான நிலைமையாகும்.

எனவே, இப்படி இப் பயங்கர நோயினால் வருடாவருடம் நாடு இழக்கின்ற பெறுமதிவாய்ந்த பெருந்தொகையான உயிர்களைக் காப்பாற்றுதல் சம்பந்தமாக சகல உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கு அறிவூட்டி அவர்களுக்கு அவ்வப் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகளின் உதவியைப் பெற்று இத் தொல்லையை முற்று முழுதாக ஒழிப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கும்படி அறிவிக்கும்படியும், அதற்கு தேவையான சட்ட ஒழுங்குகளை மேற்கொண்டு இவ் வேலைத் திட்டததை மாகாண உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து செயற்படுத்தும்படியும் தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

### புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கேள்வி கோரல்.

1. யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு 1500 மெற்றிக் தொன் பிறிமா கிறீன்மா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன.

| மாதாந்த கேள்வித்தொகை | | |
|---|---|---|
| 2003 ஜூலை | 2003 ஆகஸ்ட் | 2003 செப்ரெம்பர் |
| 1500 MT | 1500 MT | 1500 MT |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப் படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2003.07.09 ஆம் திகதி தொடக்கம் 2003.07.23ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப.10.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 1இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள்முறி - Bid bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01MT) ரூபா நானூறுப்படி (ரூபா 400) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்தில் உள்ளது.)
3. பூரணப்படுத்திய இரு கேள்விப் படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம். (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபாலுறையில் நேரடியாகவோ/தபால்மூலமோ யாழ். செயலக மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்புச் செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.07.24 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும்.
4. நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்படல் வேண்டும்.
5. ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக செயல்படுத்தல் முறிக்காக - (PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்தில் உள்ளது.)

செ.பத்மநாதன்
*தலைவர்/அரச அதிபர்*
*மாவட்டக்கேள்விச்சபை/மாவட்டச்செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2003.07.07* (C/6393)


## மணிபல்லவத்தில் மஹோற்சவம்

### இன்று பதினொராம் திருவிழா



## நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### நன்மைகள் தந்திடுவாள்

அலைகள் சத்தமிட - பக்தியால்
அன்பர்கள் முழக்கமிட
நிலைகள் காக்கவென - நிதமும்
நிம்மதி வேண்டுகிறார்!
தலைமேல் கைகளம்மா - தாயே
தடைகள் அகற்றுவாயே!
கலைகள் அருள்பவளே - கண்ணம்மா
கண்பார்க்க வேண்டுமம்மா!

நயினைப் பதியினிலே - நாகபூசணி
நன்மைகள் தந்திடுவாள்
கயிலைப் பதியுறையும் - சிவனின்
கருணை காட்டிடுவாள்
குயிலின் நல்லிசையில் - தினமும்
இனிய வரமளிப்பாள்
அயிலைக் கொண்டவனின் - அன்னை
அருளைப் பெற்றிடுவோம்.

**பூ. நகுலன் தெல்லிப்பளை**

### கனக்கும் சுமையைக் களைதல்

| | | | |
|---|---|---|---|
| நயினை | அனையே | நினையே | நயப்பார் |
| பயிலும் | அடியார் | பறிப்பாய் | வினையை |
| மயிலும் | குயிலும் | மறுகும் | மொழிப்பாய் |
| துயிலும் | பொழுதும் | தொழுவார்க் | கருள்செய் |
| நீலநிறக் | கருங்கடல் | அலைஎழ | நிமிர்ந்துயர் |
| கோலஆ | லயத்தமர்ந் | தருள்புரி | அம்மை |
| நீலகண் | டநிமலர் | நிதம்நினை | வகலாள் |
| சாலவே | தொழுதெழத் | தீயென | சாயும் |
| கனமிகு | கயிலையைக் | காதலித் | திராவணன் |
| கனமகு | கானம் | மிசைத்து | களைந்தான |
| கனமிகு | குழலாள் | கைலைக் | காதல் |
| கனமிகு | சுமைதனைக் | களைதல் | கருத்ததே. |

**சிவ சண்முகவடிவேல்**

### பிணிதீர்க்கும் அருமருந்தே!

மணி பல்ல வத்திலிருந்து
மாட்சியுடன் ஆட்சிசெய்யும்
பிணிதீர்க்கு மரு மருந்தே!
பேரின்ப ஒளி விளக்கே!
பணி வாகவே பரவும்
பக்தர்களை முத்தி பெற
அணி யாகவே அருள்வாய்!
அகி லாண்ட நாயகியே!

அற்புதங்கள் செய்து எமை
ஆட் கொள்ளும் அம்பிகையே!
பொற்பதங்கள் போற்று கின்றோம்
பொறுத்திடுவாய் எம் குறைகள்!
சொற்பதங்கள் இல் லாமல்
சோர்ந்து தவிக் கின்றேன்
நற்பதங்கள் தந் திடம்மா!
நாளுமுனைப் பாடு தற்கு!

**கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்**

### ஆலய மண்டபத்தில் இன்று ஆன்மீக சொற்பொழிவு

டாக்டர் மா.வேதநாதன்

*(இந்துநாகரிகத் துறை யாழ். பல்கலைக்கழகம்.)*

# சூடானிய விமான விபத்தில் 116 பேர் பலியாகினர்

## 2 வயதுக் குழந்தை மட்டும் உயிர்தப்பியது

(கார்ட்டூம்)

சூடானிய விமானம் ஒன்று விழுந்து நொறுங்கியதில் அதில் பிரயாணம் செய்துகொண்டிருந்த 105 பயணிகளும் 11 விமான சிப்பந்திகளும் உயிரிழந்துள்ளனர். விமானத்திலிருந்த ஒரு குழந்தை மட்டும் உயிர் தப்பியிருப்பதாக சூடானிய செய்தி ஊடகமொன்று அறிவித்துள்ளது.

போர்க் சூடான் விமான நிலையத்திலிருந்து கார்ட்டூம் நோக்கிப் பறந்துகொண்டிருந்தவேளையில் போயிங் 737 விமானம் செங்கடலுக்கு மேலாகப் பறக்கையில் கோளாறு ஏற்பட்டு கடலில் விழுந்ததாக அறிவிக்கப்பட்டது.

செங்கடல் துறைமுக நகரமான அங்காராவுக்கு அருகில் நிகழ்ந்த இந்த விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 2 வயதுக் குழந்தையைத் தவிர மற்ற எல்லோருமே பலியாகியுள்ளனர்.

விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே விபத்துக்குள்ளானதாக விமான நிலையப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (பி-9)

## ஆகஸ்டில் நடக்கவிருக்கும் அற்புதம்

# பூமிக்கு மிக அருகில் வருகிறது —செவ்வாய்க் கிரகம்—

(புதுடில்லி)

விண்ணின் விந்தையை ரசிக்கும் ஆர்வலர்களுக்கு ஒரு அற்புதம் காத்திருக்கிறது.

ஆகஸ்ட் 28ல் பூமிக்கு மிக அருகில் வரவுள்ளது செவ்வாய்க் கிரகம். அப்போது இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட தொலைவு 5.58 கோடி கிலோமீட்டராக இருக்கும். இதன் மூலம் அந்த கிரகத்தை இன்னும் தெளிவாக பார்க்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்கிறார் நேரு கோளரங்க இயக்குநர் என்.ரத்னஸ்ரீ.

இவ்விரு கிரகங்களும் ஒன்றையொன்று நெருங்கி வருவது இரண்டாண்டுக்கு ஒரு முறை நடக்கும் நிகழ்வாகும். 73 ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு பூமிக்கு மிக அருகில் செவ்வாய்க்கிரகம் தற்போது வருகிறது. இதற்கு அடுத்து 2287ம் ஆண்டில் இன்னும் 70 ஆயிரம் கிலோமீற்றர் தொலைவுக்கு பூமியை நெருங்கி வரும் செவ்வாய்க்கிரகம். பூமியை நோக்கி செவ்வாய்க்கிரகம் நெருங்கிவருவதை வெறும் கண்ணாலோ அல்லது டெலஸ்கோப் மூலமாகவோ பூமியில் எந்த இடத்திலிருந்தும் பார்க்கலாம்.

பொதுவாக செவ்வாய்க்கிரகத்தை டெலஸ்கோப் மூலம் பார்த்தால் வட்டத்தகடு போன்று தோற்றம் தரும்.

பூமியிலிருந்து வெறும் கண்ணாலும் செவ்வாய்க்கிரகத்தைப் பார்க்கலாம். ஆனால் இது சூரியனுக்கு நெருக்கமாக செல்லும் போது கண்ணுக்குத் தெரியாது.

ஆகஸ்ட் 28ஆம் திகதி நிகழும் விந்தைக்காக காத்திருக்கின்றனர் விண்ணியல் கலை வல்லுநர்கள். (பி)

# தற்கொலை தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த பெண் கைது

(ரெல்அவிவ்)

இஸ்ரேலின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் ஒன்றை நடத்துவதற்கு திட்டமிட்டிருந்த காஸா நிலப்பரப்பைச் சேர்ந்த பலஸ்தீனப் பெண் ஒருவரை பலஸ்தீனப் பாதுகாப்புப் படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

திட்டமிட்டபடி அவர் தாக்குதலை நடத்தியிருந்தால் மத்திய கிழக்கு சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் கடைப்பிடிக்கப்பட்டுவரும் யுத்த நிறுத்தம் பாதிக்கப்பட்டிருக்கும் என பலஸ்தீனப் படையினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்போவதாக கடிதம் ஒன்றின் மூலம் குடும்ப உறுப்பினர்களுக்கு அந்தப் பெண் அறிவித்திருந்த நிலையிலேயே படையினர் தேடுதல் நடத்தி அவரைக் கைது செய்துள்ளனர்.

இதேவேளை, பலஸ்தீனக் கைதிகளை விடுவிப்பது தொடர்பாக இஸ்ரேலிய அமைச்சரவை நேற்று முன்தினம் இணக்கம் கண்டுள்ளது.

எவ்வாறாயினும் இஸ்ரேலியர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை பலஸ்தீனப் படையினர் தடுத்து நிறுத்துவதைப் பொறுத்தே கைதிகளின் விடுதலை அமையும் என இஸ்ரேல் கூறியுள்ளது.

அத்துடன் இரத்தக்கறை படிந்த கைதிகளை விடுதலை செய்யப் போவதில்லை என இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-9)

# சீனாவில் ஆயிரக்கணக்கில் டைனோசர் படிமங்கள்

(பெய்ஜிங்)

சீனாவின் சுசுவான் என்ற மாகாணத்தில் உலகத்திலேயே எங்குமில்லாதவகையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட டைனோசர்களின் எலும்புப் புதைப் படிமங்கள் கிடைத்துள்ளன.

டைனோசர்கள் மட்டுமல்ல முதுகெலும்புள்ள வேறு வகை விலங்குகளின் எலும்புப் படிமங்களும் இங்கே காணப்படுகின்றன. ஆமைகள், முதலைகள், இராட்சத மீன்கள், ஊர்வன இனத்தைச் சேர்ந்த இன்னும் பல உயிரினங்கள், பாலூட்டிகள் ஆகியவற்றின் எலும்புகளும் இங்கே மண்ணில் புதைந்து கிடக்கின்றன.

மிகப் பெரிய வெள்ளம் ஏற்பட்ட போது இந்த உயிரினங்கள் எல்லாம் ஒன்றாக அடித்து வரப்பட்டு இங்கே புதையுண்டிருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

எனவே, இந்த இடத்தை மேலும் தீவிரமாக ஆராய்ந்து பார்க்க நிபுணர்கள் ஆர்வம் காட்டுகின்றனர். (பி)

# சிம்பாவே விவகாரத்தில் புஷ் தலையிடக்கூடாது

## முகாபே எச்சரிக்கிறார்

(ஹராரே)


சிம்பாவேயின் ஜனாதிபதி ரொபேட் முகாபே அமெரிக்க ஜனாதிபதியை எச்சரித்திருக்கின்றார். அடுத்த வாரம் ஆபிரிக்க நாடுகளுக்கான விஜயத்தை ஜோர்ஜ் புஷ் மேற்கொள்ளும் போது சிம்பாவேயின் உள்நாட்டு விவகாரங்களில் அவர் தலையிடக் கூடாது என்று ஜனாதிபதி ரொபேட் முகாபே கூறியிருக்கின்றார்.

தமது நாடுகளை எப்படி வழி நடத்தவேண்டும் என்பதை ஜோர்ஜ் புஷ் தமக்கு தெரிவித்தால் அவரைத் திரும்பிப் போங்கள் என்று சொல்வதைத் தவிர வேறு வழியில்லை என்று முகாபே கூறியிருந்தார்.

இன்று ஆபிரிக்க நாட்டிற்கு விஜயத்தை மேற்கொள்ளும் ஜோர்ஜ் புஷ், நைஜீரியா மற்றும் பல நாடுகளுக்கு செல்கின்றார்.

இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதியைச் சந்தித்து சிம்பாவேயின் நிலையை எடுத்துக் கூறுவதற்கு அந்நாட்டு எதிர்க்கட்சிகள் முனைந்து வருகின்றன.

சிம்பாவேயின் 11.6 மில்லியன் சனத்தொகையில் 80 வீதமானவர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (பி-9)



ரைட் சகோதரர்கள் முதல் விமானத்தைக் கண்டுபிடித்த 100வது ஆண்டு விழா ஒஹியோவின் டேடன் நகரில் நடைபெற்றது. ரைட் சகோதரர்கள் முதன் முதலில் 1903 ம் ஆண்டு விமானத்தை வடிவமைத்ததும் அதனை அறிமுகப்படுத்தியதும் இந்த டேடன் நகரிலர்தான். விழாவின் ஆரம்ப நாளில் நடைபெற்ற நிகழ்ச்சி இது. தொடர்ந்து 17 நாட்கள் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

## ஊழியர்களை நள்ளிரவில் கைது செய்தமை

# ஜெயலலிதா அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கை

(சென்னை)

தமிழ்நாட்டில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களை தமிழ்நாட்டுப் பொலிஸார் நள்ளிரவில் கைது செய்தமை மனித உரிமைகளை மீறிய செயலாகும் என்று சென்னை உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் அரச ஊழியர்களும் ஆசிரியர்களும் நடத்திவரும் வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு எதிராக தமிழ்நாடு அரசு எஸ்மா சட்டத்தை பிரயோகித்து நடவடிக்கை எடுத்திருப்பதை ஆட்சேபித்து தொழிற்சங்கங்கள் தாக்கல் செய்துள்ள மனு மீதான விசாரணை நேற்று உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சுபாஷன்ரெட்டி மற்றும் கோவிந்தராஜன் ஆகிய 2 பேர் அடங்கிய பெஞ்சின் முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இருதரப்பு விவாதங்களையும் கேட்டறிந்த நீதிபதிகள் ஊழியர்கள் நள்ளிரவில் கைது செய்யப்பட்டமை மனித உரிமை மீறல் எனக் குறிப்பிட்டனர். விசாரணை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் வேலை நிறுத்தம் நேற்று 7வது நாளாகவும் தொடர்ந்தது.

இதற்கிடையில் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள ஊழியர்களுக்குப் பதிலாக புதியவர்களை நியமிக்கும் நடவடிக்கைகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஊழியர்களில் 2 ஆயிரத்திற்கு அதிகமானவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். 15 ஆயிரம் பேருக்கு புதிதாக நியமனம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. (பி)



இஸ்ரேலியர்களால் கடந்த ஆண்டு கொல்லப்பட்ட பலஸ்தீன இயக்கப் போராளி அல்-அமரின் முதலாமாண்டு நினைவு நாளில் அஞ்சலி செலுத்தும் அவருடைய மகன் ஜிஹாத். இந்நிகழ்வு காசா சிட்டியில் நடைபெற்றது.

# அமெரிக்க இராணுவ நிபுணர் குழு லைபீரியா விஜயம்

(மங்கோலியா)

அமெரிக்க இராணுவ நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று ஹெலிகொப்டர் மூலம் லைபீரியாவின் தலைநகரான மொன்ரோவியாவை நேற்று முன்தினம் சென்றடைந்துள்ளது.

லைபீரியாவில் 14 வருட காலமாக இடம்பெற்றுவரும் உள்ளூர் யுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்து அமைதியை எவ்வாறு நிலைநாட்டலாம் என்பது குறித்து ஆராயும் பொருட்டு இந்தக் குழு அங்கு சென்றுள்ளது.

மனிதாபிமான உதவிகள் பற்றி ஆய்வுகளை நடத்தும் 20 பேர் அடங்கிய இக்குழுவினர் லைபீரியாவிற்கு மேலதிக துருப்புக்களை அனுப்புவது அவசியம் தானா என்பது குறித்தும் ஆராயவுள்ளது.

இதேவேளை, லைபீரியாவில் அமைதியை நிலைநாட்டும் பொருட்டு பெருமளவிலான அமைதிகாக்கும் படையினரை அங்கு அனுப்பி வைப்பது குறித்து அமெரிக்கா தீவிரமாக ஆலோசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க யுத்த நிறுத்த மரபுகளை மீறினாரென்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள லைபீரிய ஜனாதிபதி சாள்ஸ் ரெய்லருக்கு நையீரியா புகழிடம் வழங்க முன்வந்துள்ளது. ஆரம்பத்தில் இதனை நிராகரித்த ரெய்லர் தற்போது அதனை ஏற்றுக்கொள்வதாக அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அமைதி காக்கும் படையினர் லைபீரியாவுக்கு அனுப்பப்பட்டு நாட்டில் அமைதி நிலைநாட்டப்படுவது உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே தாம் புகலிடம் தேடி நையீரியா செல்லவுள்ளதாக ரெய்லர் நேற்று முன்தினம் கூறியிருந்தார். (பி-9)

## பூனைக்குட்டிக்கு பால் கொடுத்து வளர்க்கும் நாய்

(சென்னை)

கரூர் அருகே பூனைக்குப் பாலூட்டுகிறது ஒரு நாய். கரூர் அடுத்த மாங்காச்சொளி பாளையத்தைச் சேர்ந்த விவசாயி மாரப்பன் கடந்த 5 ஆண்டுகளாக ஒரு நாயையும் 3 மாதங்களாக பூனைக் குட்டியையும் வளர்த்து வருகிறார்.

நாய்க்கு வெள்ளையன் எனவும் பூனைக்கு சிலிஷ் எனவும் பெயரிட்டுள்ளார். 3 மாதங்களுக்கு முன்பு குட்டிகளை ஈன்ற நாயிடம் நாய்க் குட்டிகளுடன் சேர்ந்து பால்குடிப்பதைப் பழக்கமாக்கிக் கொண்டது பூனைக்குட்டி சிலிஷ்.

தற்போது வளர்ந்துவிட்ட நாய்க் குட்டிகளை பிறர் எடுத்துச் சென்றுவிட்டனர்.

நாயிடமும் பால்சுரப்பு குறைந்துவிட்டது. எனினும் தாய்ப் பாசத்தோடு பூனைக்குட்டியோடு பழகுகிறது இந்த நாய். தற்போது பால் சுரப்பு இல்லாத நிலையிலும் உரிமையாளரின் ஆணைக்கு கட்டுப்பட்டு பூனைக்குப் பால் கொடுக்கின்றது இந்த நாய். (பி-9)

# இரத்த தானம் செய்வதில் அவுஸ்திரேலியர் கின்னஸ் சாதனை

(சிட்னி)

இரத்த தானம் செய்வதில் கின்னஸ் உலக சாதனை புரிந்துள்ளார் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஜேம்ஸ் ஹாரிசன் என்பவர்.

இரத்த வங்கிக்கு 804 தடவை சென்று 480 லீற்றர் அளவிற்கு இவர் இரத்தம் அளித்துள்ளார்.

நியு சவுத்வேல்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த இவர், 51 ஆண்டுக்கு முன்பு இவரது வயது 15. அப்போது இவருக்கு இரத்தம் தேவைப்பட்டது. யாரோ ஒருவர் இவருக்கு இரத்தம் கொடுத்து இவரது உயிரைக் காப்பாற்றினார்.

இதையடுத்து இரத்த தானம் செய்வதின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டார். 1955ல் தனக்குப் 18 வயதை எட்டியபோது முதல் முறையாக இரத்ததானம் செய்தார். அதிலிருந்து இதைத் தொடர்ந்து மேற்கொள்ள ஆரம்பித்தார். இவரது தாராளத் தன்மையால் அவுஸ்திரேலியாவின் ஹீரோ என்றே இவரை அழைக்கின்றனர். அவுஸ்திரேலிய செஞ்சிலுவைச் சங்கம் இதை அறிவித்துள்ளது. (பி)

# மிக் விமானவிபத்தில் விமானி குதித்துத்தப்பினார்

(புதுடில்லி)

இந்திய வான்படைக்குச் சொந்தமான மிக் 23 ரக போர் விமானம் நேற்று முன்தினம் காலை தரையில் வீழ்ந்து நொறுங்கியுள்ளது.

இந்த விமானத்தில் இருந்த விமானி பாரசூட் மூலம் தரையிறங்கி உயிர் பிழைத்துள்ளார்.

வழக்கமான பயிற்சியில் ஈடுபட்டிருந்த போதே விமானம் விபத்துக்கு உள்ளானதாக இந்திய வான்படை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய வான்படைக்குச் சொந்தமான போர் விமானங்கள் அடிக்கடி இவ்வாறு விபத்துக்குள்ளாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (பி-9)

# இன்று ஒரு தகவல்

## கண்

''நான் எதற்குமே கண் கலங்குவதில்லை!''என்று பெருமையாகக் கூறிக்கொண்டிருந்தார் ஒருவர்! அப்படிப்பட்டவர் ஒரு நாள் கண் கலங்கிக் கொண்டிருந்தார். எனக்கு ஆச்சரியம்! அருகில் போய் ஆறுதலாக என்ன நடந்தது என்று கேட்டேன். கண்ணிலே தூசு விழுந்து விட்டது என்றார். துயரத்தினால் கலங்காதவர்கள் கூட தூசு விழுந்தால் கலங்கித்தான் ஆதல்வேண்டும்.

கண்ணிலே தூசு விழுந்தால் என்ன நடக்கிறது தெரியுமா? உடனே ஒரு உறுத்தல் ஏற்படுகின்றது. கண்ணாலே இந்த உறுத்தலைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. உடனே மூளையிடம் முறையிடுகின்றது. உடனே மூளையும் ஒரு உத்தரவு போடுகின்றது. அந்த உத்தரவுப்படி கண்ணிலே இருக்கும் நீர்ச்சுரப்பிகள் உடனடியாக வேலை செய்கின்றன. கண்ணீர் வெள்ளமாகப் பெருகுகின்றது.

அந்த வெள்ளத்திலே தூசி அடிபட்டு வந்து விடும். வெளியிலே கொண்டுவந்து விடும். இது இயற்கை கொடுத்திருக்கும் பாதுகாப்பு.

சில சமயத்திலே கண்ணில் விழும் தூசு வசதியாக சில இடத்திலே போய் ஒட்டி விடும். என்னதான் கண்ணீர் வெள்ளமாகப் பெருகினாலும் தூசு அசைந்து கொடுக்காது! இது கண்ணில் இருக்கும் வரைக்கும் தொல்லைதான். உடனடியாக கண் மருத்துவரிடம் போய்விடுவதுதான் நல்லது. அவர்கள் தூசை எடுத்து மருந்து கொடுப்பார்கள்.

கண்ணிலே உறுத்தல் வந்தால் உடனே பலபேர் என்ன செய்கின்றோம்.

பையில் இருக்கும் கைக்குட்டையை எடுத்து அதைப் பந்து மாதிரி உருட்டி வாயில் வைத்து ஊத வேண்டியது. கைக் குட்டை கொஞ்சம் சூடாகியதும் உடனே அதை கண்ணில் வைத்து அழுத்தி கண்ணை வேதனைக்குள்ளாக்குவது தான். இதனாலே என்னவாகும் தெரியுமா? கைக்குட்டையில் இருக்கும் அழுக்கு வாயினுள் இருக்கும் நுண்ணுயிர்எல்லாம் சேர்ந்து கண்ணினுள் போய்விடும். இதெல்லாம் தவறு என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள்.

இன்னொரு வேடிக்கை தெரியுமா? கண்ணிலேதூசு விழுந்து விட்டது என்று ஒருவரிடம் இன்னொருவர் சொல்வார். உடனே அவர் எல்லாம் தெரிந்தவர் மாதிரிஇவருடைய கண்ணை தன்னுடைய விரலாலே பிரித்துப்பிடித்து வாயாலே வேகமாக ஊதுவார். தூசை அகற்றுகிறாராம்!

கண்ணிலே உள்ள தூசு போகாது. இவரது வாயிலுள்ள கிருமிகள் தான் அவருடைய கண்ணுக்குப் போய்ச்சேரும்.

இன்னும் சிலபேர் தாராளமாக யோசனைகள் எல்லாம் சொல்லுவார்கள். வெண்ணெய், நந்தியாவட்டைச்சாறு, விளக்கெண்ணெய், கோழிக்கால் இரத்தம் இதிலே எதையாவது கண்ணிலே விடச் சொல்லுவார்கள். இது தவறு. வெண்ணெயிலே கொழுப்பு அமிலம் இருக்கின்றது. நந்தியாவட்டைச்சாற்றிலே இருந்து காளான் வந்து தொற்றிக்கொள்கொள்ளும். காளான் தொற்று சில சமயங்களில் கண்ணையே அழித்து விடும். விளக்கெண்ணெயில் உள்ள கலப்படப்பொருள் கண்ணை உறுத்தி சிவக்க வைத்துவிடும். இதுவே இப்படி என்றால் கோழிக்கால் இரத்தம் எப்படி?

இன்னும் சிலபேர் இப்படி இருக்கிறார்கள். பரம்பரை வைத்தியர்கள் என்ற பெயரிலே இவர்கள் எப்படித்தெரியுமா? அடுத்தவர்கள் கண்ணில் இருக்கும் தூசை எடுப்பதற்கு இவர்கள் உபயோகப்படுத்தும் கருவி எது தெரியுமா? இவர்களுடைய நாக்கு. சிலபேர் இதற்காகவே ஒரு கம்பி வளையும் வைத்திருப்பார்கள். ஒரு சின்னத் தூசு பலபேருக்கு பார்வையே போகும் அளவிற்கு செய்து விடுவார்கள். அதனாலே தான் இவ்வளவு தூரம் சொல்லவேண்டியிருக்கிறது. உங்கள் கண் நல்லபடியாக அமையவேண்டுமானால் கண்ணிலே எதையும் போடாதீர்கள். கண்ணை அழகுபடுத்துகின்றேன் என்று சொல்லி எதையும் செய்யவேண்டாம்.

ஒரே குப்பியில் இருக்கும் மையைப் பலபேர் பயன்படுத்துகிற போது அதிக நுட்பமான சில கண்நோய்கள் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்குத் தொற்றிவிடுகிறது. புருவம் கண்ணுக்குப் பாதுகாப்பு. அதைப்போய் மைதீட்டுவது இப்போது ஒரு நாகரிகம். பாலாபிஷேகம், எண்ணெய் அபிஷேகம், பூச்சாறு அபிஷேகம் இதெல்லாம் உங்கள் கண்ணுக்கு வேண்டாம்.

கண் பார்ப்பதற்குத்தான் இருக்கின்றது. அதற்காக அதைப் பாடாய்ப்படுத்தாதீர்கள். அளவாகஉபயோகப்படுத்துங்கள். சின்ன எழுத்தைப்படிப்பது, ஓடும் வாகனத்திலிருந்து படிப்பது, வெளிச்சம் குறைவாக உள்ள இடத்திலே படிப்பது இதெல்லாம் கண்ணுக்கு களைப்பை உண்டாக்கும். இராத்திரியிலே கஷ்டப்பட்டு கண் விழித்துப் படிப்பது, நித்திரை வராமல் இருக்க அவ்வப்போது கண்ணைக் கழுவிப்படிப்பது, காப்பி குடித்து நித்திரையை அகற்றுவது இப்படியெல்லாம்செய்து கண்ணை வாங்குவது அதிக கொடுமை. கண்ணுக்குச்சோர்வு வந்தால் உடனே ஒரு ஐந்து அல்லது பத்து நிமிடம் இரண்டு கண்களையும்மூடிக்கொண்டு அமர்ந்திருங்கள். அல்லது ஓய்வெடுங்கள். உற்சாகமாக உழைக்கத் தயாராகி விடும்.

பார்வைக்குறைவு இருந்தால் உடனே வைத்தியரைத் தேடி பரிகாரம்பெறுவது நல்லது. திடீரென ஏற்படும் பார்வைக் குறைவைக் கண்டு பிடிக்க சுலபமான ஒரு வழி இருக்கின்றது. படுக்கைக்கு எதிரிலே சுவரில் ஒரு படத்தை வைத்து தினம் காலையில் கண் விழித்ததும் அதைப்பாருங்கள். ஒரு கண்ணை மூடிக் கொண்டு இன்னொரு கண்ணாலே பாருங்கள்.

இப்படி மாற்றி மாற்றிப் பாருங்கள். இரண்டு கண்ணுக்கும் பார்வையிலே ஏதாவது வித்தியாசம், வேறுபாடு தெரிந்தால் கண் மருத்துவரிடம போகலாம். ஆரம்பத்திலே சிகிச்சை செய்தால் பலவிதமான நோய்களை சுலபமாக கட்டுப்படுத்திவிடலாம்.

பழங்காலத்திலே கண்ணில் நோய்க்கிருமிகள் தாக்கி ஒளியிழந்து பார்வை இழந்தவர்கள் அதிகபேர். அப்போது வைத்திய வசதியும் குறைவு. அதனாலே தான் ஆலய வழிபாட்டிலே ஒரு பழக்கம் வந்தது. கோயிலிலே கற்பூரம் கொழுத்தும்போது அந்தப் புகையை கண்ணில் எடுத்து ஒற்றிக்கொண்டால் நோய்க்கிருமிகள் கண்களைத் தாக்குவதில்லையாம். உடம்பிற்கு சுறுறுப்பு உண்டாகுமாம். ஒரு பெரிய கண் வைத்தியரே இதைச் சொல்கிறார்.

சுருக்கமாக உங்களுக்கு ஒன்று கூறுகின்றேன். உங்கள் கண்ணில் உறுத்தல் இருந்தால் உங்களை விட விஷயம் தெரிந்தவர்களிடம் யோசனை கேட்கவும். இல்லை என்றால் அவர் கோழிக்கால் இரத்தத்தை விடச்சொல்வார். எம்மைவிட விபரம் தெரிந்தவர்களிடம் ஏன் யோசனை கேட்கவேண்டும் என்று சொல்லுகின்றேன் என்றால், ஒருவர் ஒரு பஸ் தரிப்பிடத்தில் நின்று கொண்டிருந்தார். கிராமத்து ஆசாமி அவர் பக்கத்திலே நின்று படித்த ஆசாமியிடம் ''ஐயா... அந்த பஸ் எந்தஊருக்கு போகின்றது? கொஞ்சம் பார்த்துச் சொல்லுங்கள்!'' என்றார். அதற்கு இவர், ''பஸ் எங்கே வருகின்றது?'' என்றார். அவரது பார்வை வேறு எங்கேயோ போய்விட்டது.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# இன்றைய நிலைவரம் தொடர்பில் அமெரிக்க உயரதிகாரிகள் குழு சிவாஜிலிங்கம் எம்.பியைச் சந்திப்பு

(திருநெல்வேலி)

கடந்த ஞாயிறன்று மாலை ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணம் வந்த அமெரிக்க தூதரக உயர் அதிகாரிகள் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கத்துடன் தற்போதைய அரசியல் நிலைவரம் பற்றி அன்றைய தினம் இரவு 8.00மணியளவில் யாழ்.பாடி ரெஸ் ரோரண்டில் கலந்துரையாடியுள்ளனர்.

அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில், தற்காலிகமாக வடக்கு-கிழக்கைப் பிரிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பை அரசு நடத்துவது, இடைகால நிர்வாக சபை வழங்கப்படவேண்டியவிதம், இடைக்கால நிர்வாகசபை வழங்கப்படாவிட்டால் அதன் பிரதி பலன் போன்ற விடயங்கள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

இதில் இடைக்காலநிர்வாக சபை விடுதலைப்புலிகளிடம் வழங்கப்பட்டால் நிரந்தர சமாதானம் ஏற்படுமா என்று அமெரிக்க தூதரக உயர் அதிகாரிகள் கேள்வி எழுப்பினர். வடக்கு-கிழக்கு மாகாணத்தை பிரிப்பது பற்றி சர்வஜன வாக்கெடுப்பு நடத்தினால் இலங்கையில் இரத்தக்களரி ஏற்படுவதை யாராலும் தடுக்க முடியாது என இச் சமயத்தில் எம்.பி.சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளை விடுதலைப்புலிகள் அனுசரிப்பார்களா என்று அமெரிக்க உயர்அதிகாரிகள் கேட்டதற்கு, விடுதலைப்புலிகளுடன் தமிழ் மக்களின் தேசியத்திற்கு சார்பான அனைத்துக்கட்சிகளும் இணைந்து நிற்கின்றன. கரும்புலி தினத்திற்காக நானும் வன்னி சென்று திரும்பியுள்ளேன் என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஜே.வி.பி-பொ.ஐ.மு கூட்டுச் சேர்ந்தால் சமாதான முயற்சிகள் அதனால் பெரிதும் பாதிக்கப்படும் என்று சுட்டிக்காட்டிய எம்.பி, உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றுவது ஜனாதிபதி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக உத்தியோகப் பற்றற்ற தகவல் தெரிவிக்கிறது என தெரிவித்துள்ளார்.

அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில், உயர்பாதுகாப்பு வலயம், இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகள் பற்றியும் விரிவாக ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் தென்கிழக்காசிய பிராந்திய பிரதி உதவிச்செயலாளர் டொனால்ட் ஏ.காம், அமெரிக்கத் தூதரக அரசியல் செயலாளர் கிறிஸ் லோஸ், தூதரக பொது சன தொடர்பு அதிகாரி பத்மினி இராஜதுரை ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-43)

# கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படுபவை வகுப்பறையில் பயன்படுத்தப்பட வேண்டும்

## யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கருத்து

(கோப்பாய்)

செயற்பாட்டுடன்கூடியதும் உபகரணப் பயன்பாட்டையொட்டியதுமான கற்றல், கற்பித்தலில் ஆசிரியர்கள் பங்காளிகளாகவும் மாணவர்கள் பயனாளிகளாகவும் இருக்கும்போதே மாணவர்களுடைய கற்றல் முழுமையடையுமென யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய கல்விக் கண்காட்சி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

வித்தியாலய அதிபர் வே.பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

பாடசாலைக் கல்விக்கண்காட்சியில் காட்சிப்படுத்தும் உபகரணங்களை வகுப்பறையில் பயன்படுத்துவதன் ஊடாகவே மாணவர்களிடையே சிந்தனைக் கிளறலை ஏற்படுத்தி, அவர்களிடையே மறைந்திருக்கும் திறன்களை வெளிக்கொண்டு வரமுடியும்.

இச்செயற்பாட்டையே இன்றைய புதிய கல்விச் சீர்திருத்தமும் கோடிட்டுக்காட்டியுள்ளது. தேவையான பொருத்தமான உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளவும் தயாரிக்கவும், தர உள்ளீட்டு நிதியைத் தாராளமாக உரிய முறையில் பயன்படுத்தவும் முடியும்.

இதனூடாக முழுமையான கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளை ஊக்குவித்து உச்சப்பயனைப் பெறுவதற்கு அதிபர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்வது வரவேற்கத்தக்கது என்றார். (உ-79)

## இராசி பலன்

**09. 07. 2003**
**(ஆடி 25, புதன்)**

தசமி மு.ப 10.25 வரை
சுவாதி மு.ப. 7.56 வரை
இராகு காலம்- 11.58-1.28
சுபநேரம்- 04.28-5.58

**மேடம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி, பிரயாண நன்மை, தொழில் விருத்தி, தேக ஆரோக்கியம்.

**இடபம்**
பொருள்வரவு, எடுத்தகருமங்கள் கைகூடும், தேக நலன், தொழில் நன்மை.

**மிதுனம்**
வியாபார நன்மை, வாக்கு நன்மை, காரிய இடையூறு மனச்சோர்வு.

**கடகம்**
தனவிரயம், அமைதிக்குறைவு, தொழில் கஷ்ரம், பிரயாணம்.

**சிங்கம்**
கூட்டுமுயற்சி, நற்கீர்த்தி , காரிய நன்மை, புதிய பொருள் சேர்க்கை.

**கன்னி**
ரோக நிலை, மனோசங்கடம், தேவையற்ற விவாதாம், திடீர் நன்மை.

**துலாம்**
கௌரவம், நல்ல காரியம், ஜனவசியம், பயணம்.

**விருச்சிகம்**
உறவினர் உதவி, பிரயாண அலைச்சல், சுப செலவு, சோம்பல்.

**தனுசு**
சினேகிதர் நல்வரவு, போசன சுகம், முயற்சி கைகூடும், குடும்ப சுகம்.

**மகரம்**
அதிக பிரயாசை, நல்ல சம்பவம், பிறர் உதவி, சத்துரு ஜெயம்.

**கும்பம்**
கட்டுப்பாடு, குடும்பக்கவலை, உடல் நலக்குறைவு, காரிய தாமதம்.

**மீனம்**
நண்பர் விரோதம், வாகன பயம், தொழில் தடங்கல், உடல் நலக்குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# புதிய அரசு அமைக்கும் காலம் பிறந்து விட்டது

## பா. உ. அனுரா தெரிவிப்பு

(கொழும்பு)

புதிய அரசாங்கம்ஒன்றை அமைக்க வேண்டிய காலம் வந்து விட்டது என பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்



பினா அனுரா பண்டார நாயகக தெரிவித்துள்ளார்.

சிலாபத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அனுரா, ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் அரசியல் செயற்பாடுகளை ஏற்க முடியாதுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து புதிய அரசொன்றை அமைக்கும் பலம் எம்மிடம் உண்டு.

இரு கட்சிகளின் கூட்டமைப்பு ஒப்பந்தம் வெகு விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது. இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதும் புதிய அரசை அமைப்பதற்கான திட்டங்கள் தயாரிக்கப்படும்.

இரு கட்சிகளுக்கும் இடையே கைச்சாத்திடப்படவுள்ள கூட்டமைப்பு ஒப்பந்தம் குறித்து, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் கட்சிகளிடையே குழப்ப நிலைகள் தோன்றியுள்ளது எனவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார். (தி)

# முஸ்லிம்களை புறக்கணித்து விட்டு தமிழர்களின் இலக்கை அடைய முடியாது

## பிரதியமைச்சர் வசீர் சேகுதாவுத்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்களிடையே அதிகாரப் பரவலாக்கத்தை மேற்கொள்வதன் மூலமாகவே இரு சமூகங்களுக்கிடையிலான உறவினை மீளக்கட்டியெழுப்ப முடியும்என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும, வீடமைப்புப் பிரதி அமைச்சருமான வசீர் சேகுதாவுத் தெரிவித்துள்ளார்.

நிந்தவூர் அட்டப்பள்ளத்தில் அமைக்கப்படவுள்ள 100 வீட்டுத்திட்டத்திற்கான காசோலைக் கையளிப்பு வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய பிரதி அமைச்சர், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபையை தமிழ், முஸ்லிம் மக்கள் இடையே அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதற்கான அரிய சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

முஸ்லிம் மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் அரசியல் அபிலாஷைகளையும் புறம் தள்ளி விட்டு, தமிழ் மக்கள் தமது இலக்குகளை அடைய முடியாது.

அதேவேளை, தமிழ் மக்களின் விடுதலை வேட்கையினையும், அவர்கள் செய்த தியாகங்களையும் புறம் தள்ளி விட்டு, முஸ்லிம் மக்கள் தமக்கெனத் தீர்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது.

பரஸ்பரம் விட்டுக் கொடுப்பனவுகளுடனும், சகிப்புத்தன்மையுடனும் செயற்படுவதன் மூலமே இரு சமூகங்களும் தமது உரிமைகளை வென்றெடுக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்

வினா இல. : 24 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

❖ எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**இல. 30, மிலாகிரி ஒழுங்கை வெள்ளவத்தையில் வசிக்கும் கனகசபை பவித்திரன் என்பவர் ''வலம்புரி'' பத்திரிகையில் வெளிவந்த கணக்காய்வாளர் பதிவிக்கு விண்ணப்பிக்க விரும்பினார். இல.34 மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணத்தில் இயங்கும் ''இராமசாமி அன் சன்ஸ்'' நிறுவனத்தினர் கணக்காய்வாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரியிருந்தனர். விண்ணப்பதாரி சுயமாக தயாரித்த விண்ணப்பப் படிவத்துடன் ரூபா 500க்குப் பெறப்பட்ட காசுக் கட்டளையையும் பதிவுத் தபாலில் திரு.பி.வேலும்மயிலும், நிர்வாகசபை இயக்குநர் இல. 34, ''இராமசாமி அன் சன்ஸ்'' மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 31.07.2003க்கு முன் கிடைக்குமாறு அனுப்பிவைக்குமாறு கோரியிருந்தனர்.**

அதன் பிரகாரம் நீர் பவித்திரன் என எண்ணிக்கொண்டு கீழ்வரும் காசுக்கட்டளைப் படிவத்தை பூரணப்படுத்துக.

H3627-2500, 000 (99/8) m.m.rp
p.o.c
(M8*s.T&E) 11/83

உள்நாட்டுச் சாதாரண காசுக் கட்டளை விண்ணப்பம்
APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER

01. தொகை AMOUNT ரூ Rs. } ---------- ச C } ---------- இல No } ----------

02. ரூபா (சொல்லில்) Rupees (in Words) } ----------
03. பணம் கொடுபடவேண்டிய இடம் Payable at } ----------
04. பெறுபவரின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) Name of Recepient (With initials) } ----------
05. அனுப்புபவரின் பெயர் (முதலெழுத்துக்களுடன்) Name of Remitter (With initials) } ----------
06. அனுப்புபவரின் முகவரி Address of Remitter } ----------
07. திகதி Date } ----------

கையொப்பம் Signature

08. இக்காசுக் கட்டளைப் படிவத்தைத் தனது சுய விபரத்துடன் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவேண்டும். இதற்காக அவர் ஒட்டவேண்டிய முத்திரைப் பெறுமதி எவ்வளவு?----------
09. ஏன் முக்கிய ஆவணங்களை அனுப்பும்போது பதிவுத் தபாலில் அனுப்புமாறு கோருகின்றனர்? இதன் நன்மை யாது?
----------
10. இக்காலத்தில் விரைவாக தகவல்களைப் பெற்றுக்கொள்ள பயன்படுத்தப்படும் தகவல் தொடர்பு சாதனங்கள் எவை?
----------
11. ஆதிகாலத்தில் தகவல்களை எவ்வாறு பரிமாறிக்கொண்டனர்?
----------
12. கண்களை மையமாக வைத்து தகவல் பெற்றுக்கொள்ளும் சாதனங்கள் எவை?
----------

❖ **இப்பந்தியை கவனமாக வாசிக்க.**


**குழந்தாய் இவ்வளவு பழங்களின் மத்தியிலும் நீ என்னைத் தானே தூக்கினாய். உனது தெரிவு சரியானதே. இதோ என்னைப் பற்றி சில வார்த்தைகள் கூறுகின்றேன். நான் மிகவும் மென்மையானவன். என்னிடம் உயிர்ச்சத்து A.B.C, என்பன உண்டு. நான் பசியை மட்டுமல்ல தாகத்தையும் தணிப்பேன். அத்துடன் உணவையும் இலகுவாக சமிபாடடையச் செய்கின்றேன். நான் எல்லாப் பகுதியிலும் சுலபமாகக் கிடைப்பேன். பப்பாசிப்பழம் இவ்வாறு கூறும்போது கவிதாவின் காலில் ஏதோ முட்டியது.**

13. தன்னைப்பற்றிக்கூறிய பழம் எது? ----------
14. இப்பழத்தில் உள்ள சத்துக்கள் எவை? ----------
15. இப்பழத்தின்மூலம் கிடைக்கும் நன்மைகள் 2 எழுதுக? ----------

**மேரிதன்மகன் வலன்ரைன் உடன் வீட்டுக்குள் நுழையும்போது அவள் வீட்டில் இருந்து கறுப்புப் பூனை வெளியே பாய்ந்தது.**

இப்பந்தியில் இருந்து பின்வருவனவற்றிற்கு உதாரணம் தருக.

16. உயர்திணைப் பெண்பால் சொல் ----------
17. உயர்திணை ஆண்பால் சொல் ----------
18. எழுவாய் அடைமொழிச் சொல் ----------
19. இறந்தகால வினைச்சொல் ஒன்று ----------
20. அஃறிணை ஒன்றன்பால் சொல் ஒன்று ----------



21. அருகே காட்டப்பட்டுள்ள உரு யாது?
----------
22. இவ்வாறான இரு உருக்களை இணைத்துப் பெறப்படும் உருவின் பெயர் யாது?
----------
23. இந்த உருவை சம நீளமுள்ள ஈர்க்குகளையும், குரும் பெட்டிகளையும் பயன்படுத்திச் செய்யின் தேவையான ஈர்க்கு எண்ணிக்கையையும், குரும்பெட்டி எண்ணிக்கையையும் காண்க.
----------
24. இலங்கையின் கௌரவத்தையும், பெருமையையும் எடுத்துக்கூறி இசைக்கப்படும் கீதம் எவ்வாறு அழைக்கப்படும்?
----------
25. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?
----------


❖ **சரியான விடையைத் தெரிவுசெய்க.**


26. விரைவாக ஆவியாகக்கூடிய திரவம் எது?
1) மண்ணெய் 2) பெற்றோல் 3) ஸ்பிரிற்
27. கீழ்வரும் எப்பொருளின்மீது நீர் விரைவாகப் பரந்து செல்லும்
1) பலகை 2) கண்ணாடி 3) செங்கல்
28. நீரில் விரைவாகக் கரையக்கூடியது.
1) சீனி 2) உப்பு 3) மண்
29. நீரில் கரைக்கும்போது ஊதாநிறக் கரைசலைத் தரக்கூடியது?
1) கொண்டிஸ் 2) தேயிலைச்சாயம் 3) நீலத்தூள்
30. பனிக்கட்டி ஒன்றை நீரில் போட்டால் யாது நிகழும்?
1) நீர் சூடாகும் 2) அமிழும் 3) மிதக்கும்

❖ **பேருந்து வண்டி ஒன்றில் பயணம் மேற்கொள்ளும் போது செய்யத்தகாத செயல்களுக்கு நேரே X எனவும் செய்யத்தக்க செயல்களுக்கு நேரே Y எனவும் அடையாளம் இடுக.**

31. பேருந்து வண்டியுள்ளே சனநெருக்கம் அதிகமாக இருந்தால் மிதிபலகையில் நின்று பிரயாணம் செய்தல் ☐
32. வயோதிபர், அங்கவீனர், கர்ப்பிணித் தாய்மார்கள் இருப்பின் அவர்களுக்கு ஆதரவாக நடந்து கொள்ளல் ☐
33. மதகுருமார் பிரயாணம் மேற்கொள்ளின் அவர்களை மதித்து ஆசனம் வழங்கல் ☐

❖ **மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

34. மூலவர்ணங்கள்' எவை?
1) சிவப்பு, மஞ்சள், பச்சை 2) சிவப்பு, மஞ்சள், நீலம் 3) ஊதா, மஞ்சள், பச்சை
35. புகையின் போக்கை காட்டப் பயன்படுத்தக்கூடிய ரேகை
1) வளைரேகை 2) நேர்ரேகை 3) சுருள்ரேகை
36. உருவம் ஒன்று வரைவதற்கு அவசியமானது
1) வரைதல் ஊசி (பென்சில்) 2) வரைதாள் 3) ரேகைகள்
37. பாடல் ஒன்று இசைப்பதற்கு அவசியமானது
1) சுருதிப்பெட்டி 2) சுரம் 3) தாளம்
38. அடிப்படைச் சுரங்களில் ஒன்று
1) க 2)நு 3)ஞ
39. இலங்கையில் குகைக்கூரைச் சித்திரங்கள் காணப்படும் இடம்
1) சிகிரியா 2) தம்புல்ல 3) எம்பக்கே
40. சைவ ஆலயம் ஒன்றில் மரச்சிற்ப வேலைப்பாடுகளை ஒருங்கே காணக்கூடிய இடம்
1) கோபுரம் 2) கருவறை 3) தேர்
41. உருவம் அமைப்பதற்கு இலகுவான ஊடகம்
1) மரம் 2) மென்களி 3) கருங்கல்
42. கடதாசியில் பற்றிக்வேலை செய்வதற்கு அவசியமானது
1) நீர்வர்ணம், மெழுகு 2) மெழுகுவர்ணம், மெழுகு 3) நீர்வர்ணம், களி
43. பாய்ப்பின்னலை வெளிப்படுத்த ஏற்ற அலங்கார மாதிரி உரு
1) ஈரிழை 2) தனியிழை 3) சீப்புரு
44.  இவ்வமைப்பைக் குறிக்கும் பெயர்
1) சவரி 2) அரும்பு 3) கல்பிந்து
45. தூக்கியகரத்தால் காண்பிக்கப்படும் முத்திரை
1) அபயம் 2) விதர்க்கம் 3) பூவிஸ்பரிசம்
46. தூக்கியதிருவடியை உடைய சிலை
1) புத்தர்சிலை 2) நடராஜர் சிலை 3)வேளாங்கன்னி





மின்கலம் (A), மூன்றுநிற, மின்குமிழ்கள் (நீலம், சிவப்பு, மஞ்சள்) கடத்தி என்பவற்றால் இணைக்கப்பட்டுள்ள ஒரு மின்சுற்றைக் காண்கிறீர்கள். இங்கு மின்கலத்துடன் இணைக்கப் பட்டுள்ள கடத்தியொன்றின் முனை மின்குமிழின் அந்தங்களான XYZ உடன் இணைப்புச் செய்யப்பட்டு குமிழ்கள் ஒளிருவது அவதானிக் கப்பட்டது. இதன் அடிப்படையில் பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| இணைக்கப்படும் பகுதி | ஒளிரும் மின்குமிழின் நிறம் |
|---|---|
| 47. X ⟷ P | |
| 48. Y ⟷ P | |
| 49. Z ⟷ P | |

❖ **கீழ்வரும் சரியான கூற்றுக்கள் சரியாயின் A எனவும் பிழையாயின் B எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

50. கம்மாலையில் நெருப்பு எரிய காற்றை வழங்கும் உபகரணம் துருத்தி ஆகும். (----------)
51. மரப்பலகையை மட்டமாக்கப் பயன்படுவது மட்டப்பலகையாகும். (----------)
52. ஒரு சுவரை நிலைக்குத்தாக கட்டியெழுப்ப தூக்குக் குண்டு உதவும். (----------)
53. சோம்தையல், ஆரம்பத்தையல் முறையின்கீழ் கீழ்வரும் ஒருதையல் முறையாகும். (----------)
54. நெத்தலியை உண்பதனால் உடலுக்கு கொழுப்புச்சத்து அதிகளவில் கிடைக்கும். (----------)
55. பச்சை நிறத்தையும் சிவப்பு நிறத்தையும் கலந்து கபில நிறத்தைப் பெறலாம். (----------)
56. செம்புநடனம் கிராமிய நடனங்களுக்கு ஒரு உதாரணமாகும். (----------)




தரம் 5 மாணவன் ஒருவன் எரிதலுக்கு அவசியமான காரணிகளை அறிவதற்காக செய்த பரிசோதனை அமைப்பொன்றை அருகே தரப்பட்டுள்ள படம் காட்டுகின்றது.

57. இங்கு A, B எனக் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைப் பெயரிடுக.
A.......................... B..........................
58. சிறிது நேரத்தில் மெழுகுதிரிச் சுவாலையின் என்ன மாற்றத்தை அவதானிப்பீர்.
----------
59. சிறிதுநேரத்தில் கண்ணாடிக்குழாயினுள் உள்ள நீர் மட்டத்தில் என்ன மாற்றத்தை அவதானிப்பீர்.----------
60. கண்ணாடிக் குழாயை இடையிடையே திறந்து மூடிக்கொண்டிருந்தால் என்ன மாற்றத்தை அவதானிக்க முடியும். ----------
61. எரிதலுக்கு அவசியமான வளியின் கூறு எது? ----------
62. சுவாசிக்கும்போது பயன்படும் வளியின் கூறு எது? ----------

❖ **கீழே தரப்பட்டுள்ள உணவுப் பொருட்களை உட்கொள்வதன்மூலம் அதிகமாகப் பெறக்கூடிய ஒரு உணவுச் சத்து எது என்பதை உரிய கூட்டிலே சரி என அடையாளம் இடுவதன் மூலம் குறிப்பிடுக.**

| | உணவுப்பொருள் | புரதம் | மாப்பொருள் | கொழுப்பு | விற்றமின் | கனிப்பொருள் |
|---|---|---|---|---|---|---|
| 63 | உருளைக்கிழங்கு | | | | | |
| 64 | அகத்தி | | | | | |
| 65 | இறைச்சி | | | | | |
| 66 | பழங்கள் | | | | | |
| 67 | அவரைப்பயிர் | | | | | |

❖ **அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களில் இருந்து திருத்தமான சொல்லை தெரிவுசெய்து எழுதுக.**

புல்லாங்குழல், வீணை, உடுக்கு, வயலின், நாதஸ்வரம், கஞ்சிரா, மேளம்

68. வளிநிரலில் அதிர்வதன் மூலம் ஒலி எழுப்பும் உபகரணம்
69. தோல் அதிர்வதன் மூலம் ஒலி எழுப்பும் உபகரணம்
70. ஈர்க்கப்பட்ட கம்பி அதிர்வதன்மூலம் ஒலி எழுப்பும் உபகரணம்

❖ **இல 71உ76 வரையிலான ஒவ்வொரு சேவையையும் பெற்றுக்கொள்வதற்காக போக வேண்டிய இடம் எது என்பதை கோட்டினால் இணைத்துக் காட்டுக.**

| | சேவை | போகவேண்டிய இடம் |
|---|---|---|
| 71 | முத்திரை விலைக்கு வழங்குதல் | A கிராமசேவகர் அலுவலகம் |
| 72 | நன்னடத்தைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளல் | B இலங்கை மின்சாரசபை |
| 73 | போலியோ ஊசியை ஏற்றுதல் | C பிரதேச சபை அலுவலகம் |
| 74 | சைக்கிளுக்கு அனுமதிப்பத்திரம் பெறுதல் | D அஞ்சல் அலுவலகம் |
| 75 | இல்லத்திற்கு மின்சார இணைப்பைப்பெறல் | E சுகாதாரவைத்தியஅதிகாரி அலுவலகம் |
| 76 | இல்லத்திற்கு குழாய்நீர் வசதியைப் பெறல் | Fநீர்வழங்கல்அமைப்புச்சபை |

❖ **பின்வரும் ஒவ்வொரு சொல்லுக்கும் உரிய சரியான தமிழ்ச்சொல்லை இடைவெளியில் எழுதுக.**

77. Money.......................... 78. Eleven..........................
79. Father.......................... 80. Year..........................

❖ **கணனி எனும் தலைப்பில் சரியான எழுவாய் பயனிலையுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் 4 சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்.**

81.......................... 84..........................
82.......................... 85..........................
83.......................... 86..........................

# தரம்-5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

வினா இல : 22

**கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு:**

01. கு .பிரணவன்- யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி
02. பி. ஜோதிகா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
03. பி. நந்தினி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
04. ம. நிருபன்- வல்வை சிவகுரு வித்தியாசாலை
05. ஸ்ரீ. சரத்பவன்- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
06. மே. நிதினி- யா/ இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை
07. ச. ஜெயபாரதி- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
08. ம. வித்தியா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
09. த. தனுசியா- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
10. க. கிரிசாந்- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
11. ப. பரந்தாமன்- வல்வை சிவகுரு வித்தியாசாலை
12. சி. ஜோதிகா- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
13. செ. கவிஸ்ரா- நவாலி சென் பீற்றேஸ் றோ.க.த.க.பாடசாலை
14. ஸ்ரீ நீரஜா- வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
15. சி. ஜெயக்குமார்- வல்வை அ.மி.த.க. பாடசாலை
16. பா. டினேஸ்- துன்னாலை மே.மெ.மி.த.க. பாடசாலை
17. இ. கோபிகிருஷ்ணன்- வட்டு .யாழ்ப்பாணக்கல்லூரி
18. க. விதுஷா- அளவெட்டி அருணோதயாக்கல்லூரி
19. ர. ஜங்கரன்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
20. சி. கோபிகா- சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை
21. ம. கஜீபா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
22. இ. மதனிகா- வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்
23. பி. யோபிதா- வல்வை சிவகுரு வித்தியாசாலை
24. ப. ஹரிதாஷன்- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
25. த. சரண்ஜா- சுன்னாகம் நகேஸ்வரி வித்தியாலயம்
26. க. அனுஜன்- ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்
27. க. தனுசீலன்- மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்
28. ப. சந்திரா- வல்வை மகளிர் வித்தியாலயம்
29. ஞா. தாரணி- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
30. வி. கலியாணி- வல்வை றோ.க.த.க.பாடசாலை
31. பொ. பங்குஜன்- கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை
32. ச. ஜயகணேஸ்- கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை
33. ம. இந்துஷா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
34. சி. தபிரா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
35. சி. கனிஷ்ஸா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
36. க. சிந்துஜன்- துன்னாலை மெ.த.க. பாடசாலை
37. ப. குகதர்சினி- அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை
38. சி. மதுசன்- வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
39. து. வைஷ்ணவி- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
40. வே. சரணணியா- யா. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
41. சி. துளசிகா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
42. த. பிரியந்தி- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
43. ந. பவிதா- ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை
44. அ. அமலராஜ்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
45. வி. விஜர்சனா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
46. கு. ஜெய்சினி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
47. பு. உஷாந்தி- நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
48. மா. சர்மிளன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
49. பி. அருந்தஷா- கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி
50. ந. லோஜிதன்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
51. சோ. தனஞ்சயன்- தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை
52. இ. விஜுசா- மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்
53. த. துஷாந்- யா/ மத்திய கல்லூரி
54. வி. சாருஜா- யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்
55. ஜெ. சயந்தன்- யா/ வண்ணை நாவலர் மகாவித்தியாலயம்
56. க. சுஜாந்- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
57. க. சுகன்ஜா- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
58. பா. அனுசியா- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
59. க. நிகிந்தினி- சாவகச்சேரி இந்து ஆரம்பப்பாடசாலை
60. பி. அனுதர்சன்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
61. கு. சௌபிகா- அல்லாரை அரசினர் தமிழ் வித்தியாலயம்
62. சு. மொஜினி -யா/ புனித தேரேசா மகளிர் கல்லூரி
63. ஜெ. ஜெனோஷா -கரவெட்டி காசி நாதர் வித்தியாலயம்
64. செ. சிந்துரியா- சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை
65. ம. சரன்யன் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
66. லி. கருஷன்- யா/ இணுவில் மத்திய கல்லூரி
67. ர. யுதர்சன்- யா/ இந்து ஆரம்பப்பாடசாலை
68. யோ. துசிகன்- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
69. சா. மதுமதி- யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
70. ஆ. கஜீபன்- யா/ மத்திய கல்லூரி
71. கீ. அச்சுதன்- சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி
72. யோ. விதுஷ்ஷன் -உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
73. செ. திருக்குமரன்- கோப்பாய் நாவலர் தமிழ்வித்தியாலயம்
74. ச. சஜுதீப்- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
75. ஜ. சயோராஜ்- யா/ மத்திய கல்லூரி
76. இ. கிரிசாந்-யா/ மத்திய கல்லூரி
77. பு. கிசோக்- யா/ பெரியபுலம் மகாவித்தியாலயம்
78. கி. ஜனக்ஜன்- கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
79. ரா. தர்க்கா- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
80. ரா. நிவேதா- ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்
81. நா. தேனஜா- நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை
82. த. அகர்சனன்- யா/ இந்து ஆரம்பப்பாடசாலை
83. இ. சகிலா- அளவெட்டி அருணோதயாக்கல்லூரி
84. சு. அபிநயா- யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
85. சி. சோபிகா- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
86. கு. சிரஞ்ஜீவன்- சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
87. க.யுர்ஷன்- யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்
88. ச. சாதினி - உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
89. வே. பிரசன்ஜா- உசன் இராமநாதன் மகாவித்தியாலம்
90. ப. பரந்தாமன் யா/மத்திய கல்லூரி
91. கு. மோறஞ்சிதா- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
92. த. விஜிதன்- கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்
93. து. பிரபானந்தி- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
94. கு. சர்மிள- உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
95. மு. கீதாஜினி- ஆவரங்கால் புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்
96. சி. பிருந்தினி- கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்
97. கே. சோபனா- அளவெட்டி அருணோதயாக்கல்லூரி
98. சி.தர்சிகா- உசன் இராமநாதன் மகாவித்தியாலம்
99. உ. விதுஷன்- ஆவரங்கால் நடராஜ இரமலிங்க வித்தியாலயம்
100. ப. சர்மியா- ஆவரங்கால் நடராஜ இரமலிங்க வித்தியாலயம்
101. வி. அமலா- நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்
102. சி. வர்ணன்- சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை
103. ஜெ. கீர்த்தனா- சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை
104. க. அனுசியன்- சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை
105. சி. லக்சாயினி- சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை
106. இ. மிதுசன்- சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை
107. ச. அனுசா- சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை
108. பி. நிரோஷன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
109. செ. வினோதா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
110. ஜெ. தாமரா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை
111. சி. அருண்குமார்- வதிரி திரு இருதயக்கல்லூரி
112. இ. அகிலா- வதிரி திரு இருதயக்கல்லூரி
113. ஞா. ஹெனறிலக்ஷன்- யா/ மத்திய கல்லூரி
114. து. நிவேதன்- வதிரி திரு இருதயக்கல்லூரி
115. ச. அகலியா- சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
116. யோ. ஜானுர்ஸ் ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியாசாலை
117. பு. நிலக்ஷ- வதிரி திரு இருதயக்கல்லூரி
118. இ. பிரசாத்- வதிரி திரு இருதயக்கல்லூரி
119. சு. ரஜித்குமார்- யா/ மத்திய கல்லூரி
120. செ. சுவேதரன்- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
121. சி. சஞ்சிகா- ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயம்
121. சி. நிலக்ஷன்- மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை
122. பா. கரூபா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
123. ஜெ. கிருத்திகா- மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
124. இ. சௌமியா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
125. த. தனுயா- மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்
126. ஆ. லினோபா- வதிரி திரு இருதயக்கல்லூரி
127. த. அருந்துஷா- கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
128. சி. சுஷாந்தன்- வதிரி திரு இருதயக்கல்லூரி
129. பா. துஷாந்தி -யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்
130. மோ. ஜனனி- யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்
131. செ. சஜேந்திரன்- யா/ புனிதபத்திரிசியார் கல்லூரி
132. மோ. சோதீபன்- மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை
133. ம. அபிவர்ஷனி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
134. ர. ராஜ்மோகன்- சுன்னாகம் திருஞான்சம்பந்த வித்தியாசாலை
135. த. சர்மிலன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
136. மா. ஸ்ரெலா- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
137. தெ. வினோத்காந்- யா/ மத்திய கல்லூரி
138. ம. சிவறோஷன்- வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி
139. நா. நளாயினி- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
140. ம. சரண்யா- சுன்னாகம் .திருஞானசம்பந்த வித்தியாசாலை
141. க. சகாதேவன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
142. சி. சேர்யன்- சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை
143. க. பாலசேனானி சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை

## வினாத்தாள் 22-ன் விடைகள்

(01) 2 (02) 3 (03) 2
(04) 3 (05) 2
(06)மண்ணுள்புதைத்துவைத்தான்
(07)கள்வனால்எடுத்துச்செல்லப்பட்டது
(08)உண்ணாச்சொத்துமண்ணாய்ப் போகும்
(09) கட்டிடம்
(10) வந்தான் (11) பழைய
(12) சேர்த்து (13) கண்ணன்
(14) மாதவி (15) மாணவர்கள்
(16) ஆடு (17) பூனைகள்
(18) வாழ்தல்
(19) விலங்கின்பகுதி
(20) போராயுதம்
(18)–(20) பொருத்தமான வாக்கியம்

(21) 3 (22) 2 (23) 3
(24) எல்லாவற்றுக்கும் 12
(25) 26 (26) 2 (27) 3
(28) 2 (29) 3 (30) 2 (31) 3
(32) 1 (33) 2 (34) 1 (35) 3
(36) 1 (37) 4 (38) 2 (39) 3
(40) 1 (41)பல (42) 2Km524m
(43) 9/10 (44) 1/3 (45) LVIII
(46) 25Kg (47) உணவுதயாரிப்பு
(48) நீர்,கனியுப்பு,உறுஞ்சுதல்
(49) A (50) B (51) A (52) A
(53) தோற்கருவி
(54) நரம்புக்கருவி
(55) வளிநிரல் கருவி
(56) நரம்புக் கருவி
(57) தோற்கருவி (58) மின்கலம்
(59) ஆளி (60) கடத்தி
(61) மின்குமிழ் (62) சிவப்பு
(63) மஞ்சள் (64) பச்சை
(65)
(66)
(67)
(68)
(69)
(70)
(71)
(65)–(71) பொருத்தமான விடை ஆசிரியரின் வழிகாட்டல்
(72) Break Fast (73) School
(74) Night (75) Televesion
(75)-(81) வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான எழுவாய். பயனிலையுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

# அமைச்சரின் இல்லம் மீது இனந்தெரியாதோர் குண்டு வீச்சு

(கொழும்பு)

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவிகருணாநாயக்காவின் பத்திரமுல்ல வீட்டின் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீச்சு மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சரின் வீட்டின் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் இக்குண்டு வீச்சினால் படுகாயம் அடைந்துள்ளார். இவர் ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நுகேகொட பொலிஸ் பிரிவிற்கு பொறுப்பான அதிகாரி தயாரட்ண பண்டாரநாயக்க தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்கைக்குண்டு வீச்சு நடந்த சமயம் அமைச்சர் பொது நலவாய நாடுகளில் வர்த்தக அமைச்சர் கலந்து கொள்ளும் வருடாந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பிரிட்டன் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை,இச்சம்பவத்துடன் தொடர்புடைய இருவரில் ஒருவர் அடையாளம் காணப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது (தி)

# பெற்றோலிய சட்ட மூலத்திருத்தம் பெரும்பான்மை அவசியமில்லை

## உயர் நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

பெற்றோலிய நகல் சட்ட மூலத்தில் இரு பிரமாணங்களை அங்கீகரிப்பதற்கு 3இல் இரண்டு பெரும்பான்மை அவசியம் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

உயர்நீதி மன்றத்தின் இந்த தீர்ப்பை சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா நேற்று பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

மேற்படி சட்டமூலத்தின் சரத்துக்களை அரசியல் யாப்புக்கு அமைவாக திருத்தினால் பாராளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியப்படாது என நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த சட்டமூலம் தொடர்பான விவாதம் இன்று நடைபெறவுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (தி)

# இராணுவ வீரர் மீது துப்பாக்கிச்சூடு இனந்தெரியாதோர் கைவரிசை

## ஏறாவூரில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூரில் ஏ.கே.எம். வீதியில் இனந்தெியாத நபர்களினால் இராணுவ வீரர் ஒருவர் மீது நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தில் இதே இடத்தைச்சேர்ந்த முகமட் கனிபா நசீர் (வயது- 25) என்ற இராணுவ வீரர் துப்பாக்கிச்சுட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதான வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டுள்ள ஏறாவூர் பொலிஸார் தனிப்பட்ட குரோதம் காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது எனவும், மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த செப்ரம்பர் மாதம் 10ஆம் திகதி மேற்படி வீதியில் வைத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை சுட்டுக்கொன்றார் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இவரை, கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் நீதிமன்றம் பிணையில் விடுவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (தி)

# வீட்டுக்கு கல்லெறிந்து சேதப்படுத்தினர்

(நீராவியடி)

கஸ்தூரியார் வீதியிலுள்ள வீடொன்று கடந்த சனிக்கிழமை இரவு சில விஷமிகளால் கல்லெறிந்து உடைக்கப்பட்டு சேதங்களுக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

திட்டமிட்டுச் செய்யப்பட்ட இச்செயலுக்கான சூத்திரதாரிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வீட்டு உரிமையாளர் தெரிவித்துள்ளார். (பி-25)

# பல்பிடுங்கும் கருவி

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கில் இடம்பெறும் நடமாடும் சேவைகளில் பயன்படுத்த ஏதுவாக பல்பிடுங்கும் கருவி ஒன்றை வடமராட்சி கிழக்கு திலீபன் மருத்துவமனைக்கு வழங்குமாறு மருத்துவமனைப் பொறுப் பாளர் ஈழவாணி தன்னிடம் கோரிய தற்கிணங்க அடுத்த மாதமளவில் இக்கருவியை வழங்கவிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார். (உ-43)

# நிதி ஒதுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவு திட்டத்தின் கீழ், நல்லூர் சென் ஜோன்ஸ் ஆலயத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவையும்,ஆவரங்கால் சர்வோதய சனசமூக நிலையத்திற்கு 50ஆயிரம் ரூபாவையும் ஒதுக்கீடு செய்துள்ளார்.

அதேவேளை, கஜேந்திரகுமார் எம்.பி.ஆவரங்கால் விவேகானந்தர் சனசமூக நிலையத்திற்கு 50ஆயிரம் ரூபாவையும், திருநெல்வேலி பாரதி சனசமூக முன்பள்ளிக்கு 50 ஆயிரம் ரூபாவையும், அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்திற்கு நூல்கள் கொள்வனவிற்கான 50ஆயிரம் ரூபாவையும் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கியுள்ளார். (உ-15)

# தற்துணிவும், நேர்மையும் இல்லா அரசைநம்பி இனியும் ஏமாற விடுதலைப்புலிகள் தயாரில்லை

## சமகால அரசியல் நிலைவரம் குறித்து பாலகுமாரன் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு அரசியல் அணுகுமுறை மூலம் தீர்வுதேடும் நேர்மையும் துணிவும் பிரதமர் ரணிலிடம் உண்டென்று ஆரம்பத்தில் நாம்நம்பினோம் ஆனால் அந்த நம்பிக்கையை அவரே தகர்த்துவிட்டார். இனியும் அரசின் வாக்குறுதிகளை நம்பி நாம் பேச்சுவார்த்தைக்குச் செல்லத் தயாரில்லை. அரசு நீதியான நியாயமான முறையில் இடைக்கால அரசியலமைப்பை முன்வைக்குமானால, மத்தியஸ்தர்களூடாக எழுத்து மூலம் உத்தரவாதத்தை பெற்றுக் கொண்டபின்பே நாம் பேச்சுக்கு செல்வோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த கொள்கை வகுப்பாளர் கா.வே.பாலகுமாரன் சமகால அரசியல் நிலவரம்பற்றி கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சர்வதேச அச்சுறுத்தல்களுக்குப பயந்து நடுங்கி எமது உரிமைகளை விட்டுக்கொடுத்து எவர் முன்னும் கைகட்டிநிற்க புலிகள் இயக்கம் தயாரில்லை ஆனால் தற்போதைய சூழலில் நாம் யுத்தத்தைத் தொடங்கப்போவதும் இல்லை.

இடைக்கால அரசு மூலமாக அரசியல் அமைபபு மாற்றப்பட வேண்டும். அரசியல் யாப்பு மாற்றப்படாமல் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. அரசியலமைப்புக்கு வெளியில் எமது பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால், நாம் பேச்சுக்குச் செல்லத் தயார். அரசு, அரசியலமைப்பை மீறிய எம்முடன் போர்நிறுத்த உடன் படிக்கையில் கைச்சாத்திட்டது.

தமிழ்மக்களுக்கு உரிமைகள்கிடைக்கவேண்டுமானால், அரசு யாப்பினை மீறி ஏன் செயற் படக் கூடாது? அரசியல்யாப்பு என்பது சிங்களவரால் சிங்களவர்களின் நன்மைக்காகவே உருவாக்கப்பட்டது. அரசியல் அமைப்புக்குள் தமிழர்களை சிறைவைக்கவும் கொலை செய்யவுமே சிங்களவருக்கு உரிமையுண்டு. ஆனால், தமிழர்களுக்கு எந்தவித உரிமையும் இவ் அரசியல் யாப்பில் இல்லை என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அரசின் இழுத்தடிப்பு அரசியல் தந்திரோபாயம், நயவஞ்சகமான செயல்கள் என்பன இனி எடுபடாது. அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. அரசு வெறும வார்த்தையால் பதிலளிக்காமல் செயல்மூலம் காட்டவேண்டும். இதற்கான தற்துணிவ் அரசிடம் கொஞ்சமும் இல்லை. அரசின் நேர்மையின்மையினை கடந்தகாலங்களில் காணக் கூடியதாகவுள்ளது.

கடந்தகாலத் தவறுகளை அரசு உணர்ந்து மனமாற்றத்துடன் செயற்பட்டால் எமது அடுத்தகட்ட நடவடிக்கையில் நகர்வு ஏற்படும். நாம் சர்வதேச நாடுகள் எதனையும் எதிரிகளாகக் கருதவில்லை. அவர்களுடன் நேசக்கரம் நீட்டி தோழமை கொள்ளவே நாம் விரும்புகிறோம்.

ஆனால், அமெரிக்கா இலங்கை அரசின் கபடமான பேச்சுக்களில் மயங்கி எம்மை எதிரியாக நோக்குகின்றது. அமெரிக்கா உண்மையில். இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை. தமது வல்லாதிக்கத்தை இங்கு நிலை நாட்டவே தென்னாசியப் பிராந்தியத்தில் எமது பிரச்சினையை தனக்கு சாதகமாக்கிக்கொண்டு நுழைந்துள்ளது என்றார்.

ஆயுதக்கையளிப்பு என்ற அரசின் கோரிக்கைகுறித்துக் கருத்துக் கூறுகையில், அவ் ஆயுதத்தை நாம் ஏந்தியதற்குரிய காரணத்தை அரசு முற்றுமுழுதாக உணர்ந்திருநதால் அவ்வாறு கேட்டிருக்க முடியாது. அதேவேளை, இடைக்கால நிர்வாகசபை கையளிக்கப்பட்டவுடனும் நாம் ஆயுதங்களைக் கையளிக்க தயார் இல்லை. ஒரு காலவரையறையின் பின்பே அரசின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே அது பற்றி பேசமுடியும்.

அரசின் நிலையில் மாற்றம் ஏற்படாதவரை எமது நிலைப் பாட்டிலும் மாற்றம் ஏற்படாது ஆயினும், மிகவிரைவாக பேச்சுக்களை முன் நகர்த்தி செல்லவேண்டிய சூழலினை உருவாக்க தலைவர் பிரபாகரன் பல்வேறு வழிகளிலும் முயற்சி செய்து வருகிறார். தலைவர் போருக்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை. பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சி களிலேயே ஈடுபட்டிருக்கிறார். பேச்சுக்கள் மீண்டும்தொடங்கு வதற்கான காலம் கனிந்துள்ளது என மேலும் குறிப்பிட்டுள்ளார். (உ-15)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

தேசிய ஊடக கல்விடிப்ளோமா பயிற்சி நெறியில் மேலும் 50பேரைச் சேர்த்துக்கொள்ளப்பட விருப்பதாக தேசியக் கல்வி நிறுவகம் தெரிவித்துள்ளது.

ஒருவருட காலத்தைக்கொண்ட இப்பயிற்சிநெறிக்கு ஊடக கல்விசம்ப்ந்தமாக நடவடிக்கைகள் மேற்கொண்ட ஆசிரியர்கள் மட்டுமே விண்ணப்பிக்கமுடியும்.

விண்ணப்பமுடிவுத்தினம் இம் மாதம 15ஆம் திகதியாகும்.(உ-10)

## இரண்டுமாடிக் கட்டடத்திற்கு 38 இலட்சம்ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் இரண்டு மாடிக் கட்டடத்தினைக் கட்டுவதற்கு நிக்கொட் 38இலட்சம் ரூபாவை ஒதுக கீடு செய்துள்ளது.

இக் கட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த திங்கட் கிழமை நடைபெற்றது. இதற்கான அடிக்கல்லை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் நாட்டினார்.

பாடசாலை அதிபர் திருமதி அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி வலயக கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் மற்றும் நிக்கொட் நிறுவன அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (க-15)

# உயர்தமிழ் மாணவர் குழாத்தினை உருவாக்கியவர் கந்தமுருகேசனார்

## நினைவுதின விழாவில் பண்டிதர் பரந்தாமன்

(பருத்தித்துறை)

தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் தமிழுலகிற்கு ஆற்றிய பணிகளை தமிழினம் மறந்துவிட மாட்டாது. பழந்தமிழ் இலக்கியங்களையும் இலக்கணங்களையும் ஒருங்குசேரக் கற்பித்து தனக்கென ஓர் உயர் தமிழ் மாணவர் குழாத்தினை உருவாக்கியவர் கந்த முருகேசனார். இந்த மாணாக்கர்கள் இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் தமிழுக்கு மெருகூட்டி வருகின்றனர்.

மேற்கண்டவாறு தமிழ்த் தாத்தா கந்த முருகேசனாரின் 38வது நினைவுதின விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டிதர் வீ.பரந்தாமன் குறிப்பிட்டார்.

புலோலிச் சந்தியிலுள்ள கந்த முருகேசனார் திருவுருவச்சிலை அருகாமையில் பருத்தித்துறை பிரதேசசபை பிரதம நூலகர் ஏ.என். எஸ்.திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில், யாழ். செயலக தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபர் வி.வீரபத்திரபிள்ளை கிளிநொச்சி உளளுராட்சித் திணைக்கள நிர்மாண அத்தியட்சகர் எஸ்.விஜயகுமார் ஆகியோர் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

தொடர்ந்தும் உரையாற்றிய பண்டிதர் பரந்தாமன்,

நாட்டிற்காக மொழிக்காக இனத்திற்காக உழைத்த உத்தமர்களை நினைவு கூரவும் போற்றவும் தவறக்கூடாது. அவ் உத்தமர்களை நாம் மறநதுவிடுவோமானால் எமது இனத்தின் வாழ்வும் பெருமையும் அழிந்துவிடும். எமக்குப் பேராபத்துக்கள் ஏற்படும்.

ஓங்கியுயர்ந்த கோபுரங்களால் நாட்டிற்கு உண்மையான பெருமையும் சிறப்பும் எழுச்சியும் ஏற்படமுடியாது. கல்வியில் சிறந்த பேரறிஞர்கள், பெரியார்கள், மொழி-இனம்-நாடு வாழ அருஞ்சாதனைகள் புரிந்தோரும் தோன்றுவதே பெருமையாகும். காலத்திற்குக் காலம் தோன்றிய தமிழ்ப் பெரியார்கள் தமிழை வளர்க்க அரும்பாடுபட்டுச் சாதனைகள் புரிந்துள்ளதை மறந்துவிடக் கூடாது.

தொல்காப்பியர் தோன்றி தமிழுக்குப் பெருமை சேர்ந்தார். வள்ளுவர் தோன்றி தமிழினத்திற்கும் உலகிற்கும் பெருமையளித்தார். ஈழத்துப் பூதத் தேவனார், ஆறுமுக நாவலர், விபுலானந்த அடிகள், சுவாமி ஞானப்பிரகாசர், தங்கத் தாத்தா கதிரவேற்பிள்ளை, தமிழ்த் தாத்தா கந்த முருகேசனார் சதாவதானி கதிரவேற்பிள்ளை ஆகிய மதிப்பு மிக்க உத்தமர்கள் தோன்றியமையால் தமிழீழம் பெருமையடைகிறது. இவர்களைத் தமிழீழம் என்றும் மறந்துவிட மாட்டாது என்று குறிப்பிட்டார். (உ-52)

# கடத்தல்காரரை கண்டுபிடிக்க பொலிஸார்க்கு உதவிய கடிதம்

(கொழும்பு)

இலங்கைக்குப் பெருந் தொகையான போதைப்பொருட்களை கடத்திவந்த பிரபலக் கடத்தல்காரர் ஒருவரை அவரின் நண்பன் எழுதிய கடிதம் பொலிஸாரிற்கு காட்டிக் கொடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை எம்பிலிப்பிட்டி பகுதியில் நடைபெற்ற இச்சம்பவம்பற்றி மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி சம்பவத்தில் கூறப்படும் பிரபல கடத்தல்காரரும் அவரது நண்பரும் இணைந்து போதைப் பொருட்களை கடத்துதல் உட்பட பல்வேறு குற்றச்செயல்களைப் புரிந்து வந்துள்ளமையினால் இவர்கள் இருவரிற்கும் எதிராக வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன.

இதனால், இவர்களில் ஒருவர் இந்தியாவிற்கு தப்பிச்சென்று சில நாட்களின்பின் இந்தியப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார்.

மற்றவரை இலங்கைப் பொலிஸாரும இந்தியப் பொலிஸாரும் தேடி வந்தனர். இந்நிலையில் சிறையிலடைக்கப்பட்ட நண்பர் தமது உறவினர் ஒருவர் ஊடாக தப்பிச்சென்றவரிற்கு அனுப்பியிருந்த கடிதத்தை பொலிஸார் எவ்வாறோ கைப்பற்றி விட்டனர். இதனையடுத்து அவரது முகவரியை தேடிக்கண்டு பிடித்த பொலிஸார் அவரை உடனே கைது செய்தனர். (உ-10)

# ஒருவாரத்தில் 468 பேர் சந்தேகத்தில் கைது

(கொழும்பு)

கொழும்பின் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதன் பின்னணியில் கடந்தமாதம் 28ஆம் திகதி முதல் இம்மாதம் 4ஆம் திகதி வரையான ஒருவார காலப்பகுதியில் 468பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் மேற்கொள்ளப் பட்டுவரும் தேடுதல் நடவடிக்கைகள் குறித்து உள்துறை அமைச். சில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

இக்காலப்பகுதியில் 840 வீதித தடைச் சோதனைகளும் 66தேடுதல் நடவடிக்கைகளும் 800ரோந்துகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், உள்நாட்டுத் தயாரிப்பான 4 துப்பாக்கிகளும் இத் தேடுதல் நடவடிக்கைகள் மூலம் கைப் பற்றப்பட்டுள்ளன.

'தவிரவும், கொழும்பு நகரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விதத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் தொடரும் எனத் தெரிவித்துள்ளார். (பி)

TEACHING HOSPITAL, JAFFNA.

RENOVATION OF C.E.C .B ENGINEERS OFFICE

1. **Chairman, Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive sealed tenders for Renovation C.E.C.B Engineer's Office and will be closed at 10.00 A.M on 23/07/2003.**

   **Tenders should be submitted on the forms available from Director, Teaching Hospital, Jaffna obtainable up to 16/07/2003 on payment of a non – refundable fee of Rs: 250/-**

2. **Tenders will be opened immediately after the closing at the Office of the Director, Teaching Hospital, Jaffna. Tenderers or their authorized representatives are requested to be present at the opening of tenders.**

3. **Tender forms will be issued only to Contractors having valid registration in Grade M7 and above in the field of Building Construction under the Institute of Construction Training and Development (ICTAD) criteria and valid membership of National Construction Contractors' Association of Sri Lanka (NCCASL).**

4. **Sealed tenders may be dispatched either by registered post or hand delivered to Director,Teaching Hospital, Jaffna, or deposited in the tender Box kept at the address appearing below, to receive before the closing time.**

5. **Tender Documents may be inspected free of charge at the resident Engineer's Office, C.E.C.B, Teaching Hospital, Jaffna.**

6. **For further details please contact A.O. G.H. Jaffna.**

*Dr. S. Sathurmugam*
*Chairman,*
*Divisional Tender Board,*
*Teaching Hospital,*
*Jaffna.*

[C/6398]

**வலி.கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி**

**1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 49ம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்**

**வலி. கிழக்கு பிரதேசசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் கட்டடம், மதில், மலசலகூடம் என்பன கட்டுதல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும். எனவே மேற்படி கட்டட வேலைகளுக்கு பிரதேச சபையில் இருந்து பெறப்படும் முறையான விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பித்து சபையின் முன் அங்கீகாரம் பெறுதல் வேண்டும் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன். முன் அனுமதிபெறாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நஷ்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.**

*வலி.கிழக்கு பிரதேசசபைஇ*
*தலைமை அலுவலகம்இ*
*நீர்வேலி.*

(C/6397)

*க.வெங்கடாசலம்*
*செயலாளர்.*

# சமாதானம் நிலைபெறுவதற்கு புலிகளின் பலம் அதிகரிக்கவேண்டும்

## கரும்புலிகள் தின விழாவில் இளம்பரிதி

(பருத்தித்துறை)

தமிழ் மக்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டுபவர்கள் கரும்புலிகளே. நாம் எதிர்நோக்குகின்ற பயங்கரவாத தடைகளை முறியடித்து வீர சாதனைகளை ஏற்படுத்துபவரகளும் கரும்புலிகள் என்பதை சர்வதேசமும் அறிந்துள்ளது. சமாதானம் நிலைபெற வேண்டுமானால் கரும்புலிகளினதும், புலிகளினதும் பலம் அதிகரிக்கப்படவேண்டும்.

மேற்கண்டவாறு, விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கரும்புலிகள் தின விழாவிலே உரையாற்றும் போது அவர் தெரிவித்தார்.

வடமராட்சி கல்வி வலய முன் பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் தொடர்ந்து உரையாற்றிய இளம்பரிதி,

கடந்த 1987ஆம் ஆண்டு இராணுவ பலத்தினால் வடமராட்சி மண்ணையும் மக்களையும் ஆக்கிரமித்து மக்களைச் சிறையில் வைத்து மக்களைக் கொன்றும் கொள்ளையடித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழ் போராட்டம் முடிந்துவிட்டது என நினைத்துக் கொண்டிருந்த வேளையில் ஒரு சில மணி நேரத்தில் இதே இடத்தில் ஆக்கிரமித்திருந்த இராணுவ நிலை மீது கப்டன் மில்லர் கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவை இந்தியாவிடம் சரணாகதி அடைய வைத்தார்.

**சமாதானமும் கரும்புலிகளும்**

தமிழர் விடுதலைக்காக மில்லர் தன்னை மாய்த்தபோது எதிரியின் படை பலங்குறைந்தது. தமிழர் படை பலமாகத் தோன்றியது. சமாதானம் வேண்டுமென்றால் கரும்புலிகள் வேண்டும் என்று முதியவர் ஒருவர் எனக்குக் கூறினார். அது முற்றிலும் உண்மையானதே. மில்லரின் தாக்குதலால் யுத்த வெறியர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள். அதனால் இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டது.

தீச்சுவாலை இராணுவ நடவடிக்கையை முறியடிப்பதற்கு கரும்புலிகளின் பலம்தான் காரணம். அதேபோல இறுதிக்கட்ட இராணுவ நடவடிக்கைகள் அனைத்தும் கரும்புலிகளாலேயே தோற்கடிக்கப்பட்டன. அதன் பின்னர் தான் சமாதான வழிமுறை ஏற்பட்டது.

சமாதானம் நிலைபெற புலிகள் பலமாக இருக்கவேண்டும்.

எமது அடுத்த கட்ட நகர்வை நிர்ணயிப்பவர்கள் மக்களே. சந்திரிகாவும் கதிர்காமரும் எமக்கான சர்வதேச நட்புறவை தடை செய்யும் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர. சுவீடன், அரசு -புலிகள் விடயத்தில் தடை ஏதும் விதிக்கவில்லை. நட்புறவுச் சக்திகள் புலிகளுடன் ஒத்திசைவாக வரும் வேளையில் அதனை விரும்பாது நட்புறவை அவர்கள் முறியடித்து வருகிறார்கள். நட்புறவுச் சக்திகள் எம்மை நெருங்கி வரும் இவ்வேளையில் எமது போராட்டத்தில் ஆதாரமான களமாக நிற்கும் எமது மக்கள் ஒன்று திரண்டு ஓரணியில் நிற்க வேண்டும்.

**ஒளியூட்டும் கரும்புலிகள்**

போராட்ட வரலாற்றில் வெற்றிகளைக் குவித்துள்ள கரும்புலிகள் அணியைக் கலைக்க வேண்டும் என சந்திரிகா கோரிக்கை விடுத்துள்ளார். கரும்புலிகளைக் கலைக்காது விட்டால் புலிகளை தோற்கடிக்க முடியாது எனவும் கூறுகிறார். தமிழ் மக்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்டுபவர்கள் கரும்புலிகள். எந்தத் தடைகளையும் முறியடித்து சாதனைகளை ஏற்படுத்துபவர்கள். நாம் கரும்புலிகளை இழக்கவும் முடியாது, கலைக்கவும் முடியாது. எனவே அரசு புத்திபூர்வமான முடிவுகளை எடுக்க வேண்டும். இம்முடிவினால் தான் இலங்கையில் அமைதி நிலை தோன்றும்.

சமாதானப் பேச்சுக்கள் சம்பிரதாயப்பேச்சுக்கள் அல்ல. சமாதானப் பேச்சுக்கள் உண்மையானதாக இருக்க வேண்டும். பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட இணக்கப்பாடுகளை அமுலபடுத்த வேண்டும். அமுலப்படுத்துவதில் பின்னடிப்பை ஒருபோதும் ஏற்க முடியாது. நல்லெண்ணத்துடனும்




இதயசுத்தியுடனும் பேச்சுக் கோரிக்கையை பரிசீலிக்கத் தயாரென எமது தலைவர் தெரிவித்துள்ளார். இதற்கு முன்னோடியாக இடைக்கால நிர்வாகத்தை வழங்குவது நல்லது எனத் தெரிவித்துள்ளோம் என்று குறிப்பிட்டார். (பி-52)

## வடகிழக்கு இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்குவதே பொருத்தமானது

### கூட்டமைப்பு இதுவிடயத்தில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் ஆனந்தசங்கரி எம்.பி. பி.பி.ஸிக்குப் பேட்டி

(கொழும்பு)

தமது அபிலாஷைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருப்



பவர்களும் பதவி ஆசையுடையவர்களுமே என்னைப்பற்றி அவதூறான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றார்கள்.

அண்மையில் ஒருவர் ஆனந்தசங்கரி யாழ்ப்பாணம் வரவேண்டுமானால் இராணுவத்தினரின் பாதுகாப்புடனேயே வரவேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். இது ஒரு விசமத்தனமான பிரசாரம் என தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி, கூட்டமைப்பின் கொள்கைகள் செயற்பாடுகளில் இருந்து விலகிச் செயற்பட்டு வருவதாக எழுந்துள்ள குற்றசசாட்டுக்கள் குறித்து பி.பி.ஸிக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

சில விடயங்களில் வெளிப்படையாகச் சிலரைக் குற்றம் சாட்ட முடியாமல் இருக்கிறது. இதனால் ஒத்த ஒருமித்த கருத்துக்களையே வெளியிட வேண்டியிருக்கிறது.

இதேவேளை, இலங்கை அரசும், இந்திய அரசும் ஏற்கனவே வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாகத்தினை வழங்க முடிவு செய்திருந்தன. ஆனால், ராஜீவ்காந்தியின் கொலைக்குப் பின்னரும் வேறு சில காரணங்களினாலும் அதை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வழங்க முடியாது போனது.

எனவே, தற்போது கூறப்படும் இடைக்கால நிர்வாகம் என்பது ஒரு புதிதான விடயமல்ல. இது முன்னரே வழங்கப்பட்டிருந்தால் நாடு இத்தகையதொரு அழிவுப் பாதைக்கு சென்றிருக்காது.

அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது போரைக் கைவிட்டு சமாதானப் பேச்சிற்கு இணங்கியிருப்பதால் தற்போது வடக்கு-கிழக்கிற்கு இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவது பொருத்தமானதொன்றாகவே இருக்கும்.

இதற்கு எமது கூட்டமைப்பு அரசிற்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகின்றது. தமிழீழ விடுதலைப்புலிகளின் இக்கோரிக்கைக்கு எமது கட்சி பூரண ஆதவையும் வழங்கியுள்ளது.

இது இவ்வாறிருக்க, எமது கட்சிக்குள்ளே பிளவுகள் ஏற்பட்டிருப்பதாகவும் என்னைப் பதவி நீக்கவிருப்பதாகவும் சில ஊடகங்கள் தவறான செய்தியை வெளியிட்டு வந்திருக்கின்றன.

அது சிலரின் தனிப்பட்ட குரோதங்களாகக் கூட இருக்கலாம். அப்படித்தான் என்னைப் பதவி நீக்க அவர்கள் முயற்சித்தாலும் அது தோல்வியிலேயே முடியும் என்றார். (உ-10)

## மகளிர் அமைப்புகள் அங்குரார்ப்பணம்

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள வெற்றிலைக்கேணி முள்ளியாள போக்கறுப்பு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மகளிர் அமைப்புக்கள் அண்மையில் அங்குராப்பணம் செய்துவைக்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கிலுள்ள மிகுதி ஆறு கிராமசேவக அலுவலர் பிரிவிலும் மிக விரைவில் மகளிர் அமைப்புகள் அமைக்கப்படுமென வடமராட்சி கிழக்கு அரசியல்துறை மக்கள் தொடர்பாளர் யாழ்.மன்னன் தெரிவித்துள்ளார். (உ-35)

## ஜனாதிபதி கொலைச்சதி குறித்த அறிக்கை சட்டமா அதிபர் வசம்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை படுகொலைசெய்வதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரபல அங்கத்துவர் ஒருவர் திட்டமிட்டுள்ளார் என வெளியாகியுள்ள செய்தி குறித்த விசாரணையை மேற்கொண்டுவந்த பொலிஸார் தமது அறிக்கையினை சட்டமா அதிபர் கமல சபேசனிடம் கையளித்துள்ளனர்.

இதுபற்றி சட்டமா அதிபர் திணைக்களம் தகவல் வெளியிடுகையில்,

இது தொடர்பான அறிக்கையினை தாங்கள் ஆராய்ந்துவருவதாகவும் இச்செய்தி தவறாக இருந்தால் அச்சட்டத்தின் கீழ் மேற்படி செய்தியை வெளி யிட்ட பத்திரிகைக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமா என்பது பற்றி ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேற்படி செய்தியை வெளியிட்ட பத்திரிகையின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் அங்கு கடமையாற்றும் ஊழியர்களின் வாக்குமூலங்களையும் பொலிஸார் பதிவுசெய்துள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ செய்திருந்த முறைப்பாடடை அடுத்தே பொலிஸார் இந்த விசாரணையை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

### உண்மை கண்டறியும் ஜனாதிபதி ஆ.கு

## ஆடிக்கலவரத்தில் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு வழங்கப் பரிந்துரை

(கொழும்பு)

மிகவிரைவில் தனது பணிகளை முடித்துக் கொள்ளவிருக்கும் உண்மை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையில், 1983 யூலை கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது அவர்களின் உரிமைக்காரர்களுக்கு நட்டஈடு வழங்குமாறு சிபாரிசு செய்துள்ளது.

பொருளாதார ரீதியான அழிவுகளுக்கு முழுமையான இழப்பீடு வழங்கப்படுவது இனக் கலவரங்களுக்கு தூபமிடுபவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கும் என்றும் 1983 தொடக்கம் இழப்பீட்டு தொகைக்கு அரசாங்கம் வட்டியையும் கொடுக்க வேண்டும் என்றும் அது சிபார்சு செய்துள்ளது.

எதிர்காலத்தில் இனக்கலவரங்களைத் தவிர்க்க வேண்டியுள்ளதனால் இன சமத்துவத்துக்கான புதிய யுகம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்று அந்த அறிக்கை மூலம் ஜனாதிபதியையும், பிரதமரையும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனை அமுல் செய்வதற்கு ஒரு சட்டரீதியான கட்டமைப்பு உருவாக்கப்படவேண்டும் என்று, அது சகல வித இனவாத நடவடிக்கைகள், இனஞ்சார் ஓரங்காட்டுகை என்பவற்றை ஒழித்து, நிரந்தரமான இன இணக்க நிலையை ஏற்படுத்துவதாக அமையும் என்றும் அறிக்கையில் விதந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசாங்கம் பதவிகளை வகிப்பவர்கள் அடிப்படை உரிமைகளை மீறி செயற்படும் போது அவற்றை தடுப்பதற்கும், கண்டிப்பதற்கும் ஏற்றவகையில் மனித உரிமை ஆணைக்குழுவின் பணிப்பின்கீழ் இயங்கவல்ல புலன்விசாரணைப் பிரிவு ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றும் ஆணைக்குழு விதந்துரைத்துள்ளதுடன்,

அத்தகைய புலன்விசாரணைக் குழுவின் அதிகாரிகளுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்று ஆணைக்குழு தனது அறிக்கையில் சிபார்சு செய்துள்ளது.

மேற்படி புலன்விசாரணைக் குழு, இன விவகாரங்கள் தொடர்பில் பொலிஸார் நடத்தும் விசாரணைகள் திருப்தியற்றதாக இருக்கும் பட்சத்தில் அவற்றில் தலையிட்டு மேலதிக விசாரணைகளை நடத்தவும் அனுமதி கோரியுள்ளது.

## சிங்கராஜவனப் பிரதேசத்தை விஸ்தரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

சிங்கராஜவனப் பிரதேசம் மேலும் விஸ்தரிக்கப்படவிருப்பதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம், பெருந்தோட்டத்திற்கென கொள்வனவு செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான ஏக்கர் காணி சிங்கராஜவனப் பிரதேச விஸ்தரிப்பிற்கென அரசினால் சுவீகரிக்கப்படவுள்ளது.

உலகின் வரலாற்றுப் பெருமை மிக்க வனப் பிரதேசமாக சிங்கராஜவனத்தை மாற்றுவதே இதன் முக்கிய நோக்கம்.

அத்துடன் வனப்பிராந்தியப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் நிபுணர்களின் ஆலோசனைகளையும பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இதேசமயம், இளைஞர்களிடையே வனப் பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி வரும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் சேவையை மிகவும் வரவேற்பதாகவும் கல்வி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-10)

எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற் கரிய செயல்.
-குறள்

# வலம்புரி

## மிலிந்த-பீரிஸ் உறவில் விரிசல்?

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் அரசின் பக்கத்தில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸும் அமைச்சர் மிலிந்த மொறகொடவும் முக்கியமான இரு பாத்திரங்கள். இவர்கள் இருவரினதும் பங்களிப்பு இல்லாமல் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவால் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது கடினமே. இருவரிலும் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பிரதமரின் வலதுகரம் எனலாம்.

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில இருந்த போதும் பேச்சுக்கள் மூலம் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதில் அமைச்சர் பீரிஸ் உறுதியாக இருந்தவர். அதிகாரப்பரவலாக்கல் யோசனையை தயாரித்தவர். எனினும் அவரின் சமாதான முயற்சிக்கு ஜனாதிபதியின் ஆதரவு கிடைக்கவில்லை. பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்தையின் வலைக்குள் சிக்குண்டு கிடந்த ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அமைச்சர் பீரிஸின் நல்ல குணமும், அறிவுத்திறனும் புரியாமல் போனதில் விசித்திரம் ஏதுமில்லை.

தனது சமாதான முயற்சிக்கும், தன்னால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்டத்திற்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஜனாதிபதியும் வழங்கிய வெகுமதியைக் கண்டு அதிர்ச்சி அடைந்த அமைச்சர் பீரிஸ் ஜனாதிபதியோ பொதுஜனஐக்கிய முன்னணியோ சமாதான வழியில் இனப்பிரச்சினையை தீர்க்கப் போவது இல்லை என்ற முடிபை எடுத்துக் கொண்டு ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்து கொண்டார்.

அமைச்சர் பீரிஸின் அரசியல் அரங்கேற்றம் ஜனாதிபதி சந்திரிகாவினால் நடத்தி வைக்கப்பட்டதாயினும் பல்கலைக்கழக பேராசிரியராக இருந்த பீரிஸ் அரசியலுக்குள் வருவதற்குக் காரணம் இனத்தின் பேரால் நாட்டில் நடைபெறும் யுத்தத்தை சமாதான வழியில் முடிபுக்கு கொண்டு வர வேண்டுமென்ற ஒரே நோக்கமாகும்.

எந்த நோக்கத்திற்காகக் பீரிஸ் அரசியலுக்குள் நுழைந்தாரோ அந்த நோக்கத்தை அடைந்து கொள்வதற்காகப் பொதுஜன ஐக்கிய முன்னணியில் இருந்து விலகி ஐக்கிய தேசிய முன்னணியுடன் இணைந்தார்.

ஆனால் அவரின் சமாதான வேட்கையை ஐக்கிய தேசிய முன்னணி அரசும் சரியாக புரிந்து கொள்ளவில்லை.

தீர்வு ஏட்டப்பட முன்னர் எந்தப் போராட்ட அமைப்பும் ஆயுதங்களை கைவிட்டதாக வரலாறு இல்லை என்ற யதார்த்தத்தை வெளிப்படையாக கூறிய அமைச்சர் பீரிஸ் இப்போது பேச்சுக்கள் தொடர்வதற்கு முன்னதாக விடுதலைப்புலிகளிடம் இடைக்கால சபை சட்டவரைபை கையளிக்க வேண்டும் என்பதைக் கூற அதனை அமைச்சர் மிலிந்த எதிர்ப்பது ஏன்? அதற்குப் பின்னால் அமெரிக்கா இருக்கிறதா?

# ரொங்கோ நிறுவன கண்ணிவெடி அகற்றும் பணிகள் படையினருடன் இணைந்தே இனி முன்னெடுப்பு

## யாழ். அரச அதிபரிடம் வாஷிங்டனில் இருந்து வந்த அதிகாரி தெரிவிப்பு

(தென்மராட்சி)

அமெரிக்கா அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சரசாலையில் மேற்கொள்ளப்பட்டு வந்த ரொங்கோ கண்ணிவெடியகற்றும் திட்டத்தினை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கான சாத்தியக் கூறுகளை நேரில் ஆராயும் பொருட்டு அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்டனில் இருந்து இரு உயர் மட்ட அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தனர்.

செயல்திட்ட முகாமையாளர் வில்லியம் ஜே.நீட் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் திட்டத்தின் அதிகாரியான பேபோரா நெற்லன்ட் ஆகியோரே இவ்விதம் யாழ்ப்பாணம் வந்தவர்கள் ஆவர்.

இவ்விரு உயர் அதிகாரிகளும் நேற்றுக்காலை யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பதமநாதனைச் சந்தித்து தமது கண்ணிவெடியகற்றும் திட்டம் பற்றி கலந்துரையாடினர்.

அதன் பிரகாரம் ரொங்கோ நிறுவனம் இனிவரும் காலத்தில் இலங்கையரசாங்கத்தின் பாதுகாப்புப்படையின் கண்ணிவெடியகற்றும் பிரிவுடன் இணைந்தே தமது பணிகளை மேற்கொள்ளும் என்று தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம் தமது செயற்ப்பாடுகள் இடம் பெறுமென வில்லியம் நீட் அரசாங்க அதிபரிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை ரொங்கோ குழுவின் பணிகள் கடந்த 30 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றுள்ள நிலையில் அரச அதிபரின் வேண்டுகோளின் பிரகாரமே இப்பணிநீடிப்பு இடம் பெற்றள்ளதும் கண்ணிவெடிகளை அகற்றுதல் மற்றும் அதற்கான நவீன தொழில் நுட்ப உபகரணங் களை கையாளும் பயிற்சிகளை இலங்கை இராணுவ கண்ணிவெடியகற்றும் பிரிவுக்கு வழங்கப்பட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆங்காங்கே புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் மக்களின் மீள் குடியேற்றத்திற்கு தடையாக விளங்குவது மற்றும் உயர்பாதுகாப்பு வலயங்களில் இவை புதைக்கப்பட்டுள்ள இடங்கள் குறித்து அரச அதிபர் இவர்களுக்கு விளக்கம் அளித்ததன் பேரில் இவர்கள் உயர்பாதுகாப்பு வலயங்களையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதே வேளை அமெரிக்காவில் இருந்து வந்திருந்த இவ்விரு உயர் மட்ட அதிகாரிகளும் சரசாலைக்கு சென்று ரொங்கோ நிறுவனம் அமுல் படுத்திய கண்ணிவெடியகற்றும் திட்டத்தினை நேரில் பார்வையிட்டனர்.

இதேவேளை கடந்த திங்கள் அன்று ஏ-9 பாதையூடாக யாழ்ப்பாணம் வந்திருந்த அமெரிக்காவின் தென்கிழக்காசிய பிரிவுக்கான பிரதி உதவிச் செயலாளர் டெனால்ட் ஏ.கலம் கொழும்பு திரும்பியுள்ளார் அவருடன் கூட வந்திருந்த தூதரகத்தின் அரசியல் பிரிவுச் செயலாளர் கிறிஸ்லோங் மற்றும் பொதுஜன தொடர்பு அதிகாரி திருமதி பத்மினி இராசதுரை ஆகியோர் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்திலே தங்கியுள்ளனர்.

நேற்றைய தினம் இங்கு வந்திருந்த இரு உயர் அதிகாரிகளும் இவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-77,4,43)

## வடகிழக்கில் பணியாற்றும் ஒரு தொகுதி

# பொலிஸாரை மீளப் பெறுவது குறித்து

## உள்துறையமைச்சு பரிசீலனை

(கொழும்பு)

வடக்குக்கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் பொலிஸாரில் ஒரு தொகுதியினரைக் கொழும்புக்கு மீளப்பெறுவது தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருவதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா மேலும் தெரிவிக்கையில்,

வடக்குக் கிழக்கில் இயல்பு நிலை திரும்பி வருகிறது. ஆனால் கொழும்பில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்தி சட்டம் ஒழுங்கை நிலை நாட்டும் பொறுப்பு பொலிஸாருடையது. இதற்கு மேலதிக பொலிஸார் தேவைப்படுகின்றனர்.

அத்துடன் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இங்கு அடிக்கடி சுற்றி வளைப்புக்கள் மற்றும் தேடுதல்களை நடத்த வேண்டியிருப்பதால் பெருமளவு பொலிஸார் தேவைப்படுகின்றனர் என்று குறிப்பிட்டார்.

இதே கருத்தையே பிரதிப் பொலிஸ்மா அதிபர் போதிலியனகேயும் வலியுறுத்தி இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

# ஆலய அருகாமையில் படைமுகாம்

## உற்சவத்தை நடத்துவதில் சிரமம்

(கல்வயல்)

அரியாலை பிரப்பங்குள மகாமாரியம்மன் ஆலயத்திற்கு அருகில் இராணுவத்தினர் முகாம் அமைத்திருப்பதால்மேற்படி ஆலய வருடாந்த உற்சவத்தை நடத்துவதில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மேற்படி ஆலய உற்சவம் ஆரம்பமாக இருப்பதால் இது தொடர்பாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இராணுவநிலைகள் யாவும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தலையீட்டினால் அகற்றப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கவை. (உ-36)

## அரசியல்வாதிகள், உயரதிகாரிகள் மீது

# காணாமல் போனவர்களின் உறவினர்கள் கடும் விசனம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக்குடா நாட்டில் படையினரால் கைதாகிக் காணமற் போனோரைக் கண்டு பிடிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் எடுப்பதில் அரச அதிகாரிகளோ அல்லது அரசில்வாதிகளோ இதுவரை எத்தகைய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என காணாமல் போனோரின் உறவினர்கள் சங்க நிர்வாகிகள் பெரும் அதிருபதியும் விசனமும் தெரிவித்துள்ளனர்.

க்டந்த 1996,1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் யாழ்க்குடா நாட்டில் கைதாகி காணாமல்போன தமது உறவுகளைத் தேடிக்கண்டு பிடிக்கப் பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டிருந்த போதிலும் இது விடயத்தில் பாதுகாப்புப் படையினரோ அல்லது அரசோ எத்தகைய உறுதியான பதிலையும் தராமல் இருந்து வருகின்றது.

இந்த விடயத்தில் கைதாகி காணாமல் போனோரின் பெற்றோர்-பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் நேரில் தொடர்பு கொண்டிருந்த போதிலும் காணாமல் போனவர்களை கண்டு பிடிப்பதற்குரிய முயற்சிகள் எதுவும் எடுக்கப்படவில்லை

இதேவேளைக் காணாமல் போன தனது உறவுகளைத் தேடி சங்க நிர்வாகிகள் குழு இவ்வருட ஆரம்பத்தில் தென்பகுதிகளில் இருக்கும் சிறைக் கூடங்களுக்கு விஜயம் செய்து ஏமாற்றத்துடன் திரும்பி வந்மமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன் கைதாகிக் காணாமல் போனோர் விடயத்தினை முதன்மைப்படுத்தி யாழ்.அரச செயலகம் முன்பாக அறவழிப் போராட்டங்கள் நடத்தியிருந்த போதிலும் எத்தகைய சாதகமான முடிபுகளும் கிடைக்க வில்லை எனவும் சங்க நிர்வாகிகள் கவலை தெரிவித்துள்ளனர். (உ-77)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று முற்பகல் 10.00 மணிக்கு அதிபர் செல்வி பா.மார்கண்டு தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு யாழ். கல்வி வலய கல்விப் பணிப்பாளர் க.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகவும் ஓய்வு பெற்ற ஆசிரியர்களான சைவப்புலவர் வை.த.சிற்றம்பலம், க.கனகசிங்கம் ஆகியோர் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரிசில்களை திருமதி தவமணி விகனேஸ்வரன் வழங்கவுள்ளார்.(வ-5)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்லக்கதிர்காம ஆலய மகோற்சவ கால ஆன்மீக தொடர் சொற்பொழிவில் இன்று புதன்கிழமை "ஆலய வழிபாடு" என்னும் தலைப்பில் ஆசிரிய மாணவர் சைவப்புலவர் ஏ.அனுஷாந்தன் உரையாற்றவுள்ளார். (உ-8)

## இலங்கைத்தூதரகங்களின்

# பணியாளர்கள் 16 பேர் யாழ்ப்பாணம் வருகை

(தென்மராட்சி)

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதுவராலயங்களில் பணிபுரிவதற்கு தெரிவு செய்யப்பட்ட 16 பணியாளர்கள் அடங்கிய குழு ஒன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இக்குழுவினர் நேற்று முன்தினம் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதனைச் சந்தித்து யாழ்.மாவட்ட நிலைமைகள் பற்றியும் இங்கு வாழ்கின்ற குடும்பங்களின் சமூகப் பொருளாதார கல்வி சுகாதார நிலைமைகள் பற்றியும் கேட்டறிந்து கொண்டனர்.

இக்குழுவினருக்கு யாழ்.அரச அதிபர்.செயலகத்தினால் அண்மையில் தயாரித்த குடாநாட்டு விபரங்கள் அடங்கிய விபரணப் படத்தைக் காண்பித்து விளக்கமளித்தார்.

அத்துடன் இக்குழுவினர் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடினர் என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். (உ-77)

# வடமராட்சியில் பொலிஸார் பெருமெடுப்பில் வீதிச் சோதனை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப்பகுதியில் நேற்று முன தினம் மாலை பொலிஸார் திடீர் வீதிச் சோதனைகளை மேற்கொண்டனர்.

வடமராட்சிப் பகுதிகளான வதிரி, உடுப்பிட்டி மற்றும் மந்திகை சந்தை பகுதிகளில் இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட பொலிஸார் வீதித் தடைகளை ஏற்படுத்தி வீதியால் சென்று வந்த வாகனங்களையும் பயணிகளின் பொதிகளையும் சோதனை செய்தனர்.

இராணுவ வாகனங்களில் எடுத்து வரப்பட்ட வீதித்தடையை ஏற்படுத்தும் பொருட்களை வீதிகளில் போட்டு பொலிஸார் சோதனைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பிற்பகல் 4.00 மணிக்கு ஆரம்பமான சோதனை நடவடிக்கைகள் பொழுது சாயும் வரை இடம் பெற்றன நீண்ட காலத்தின் பின்னர் பெருமெடுப்பில் வீதிச் சோதனைகளை பொலிஸார் மேற் கொள்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (த)

## விளக்க மறியல்

(யாழ்ப்பாணம்)

தந்தையின் கத்திக் குத்தில் மகன் பலியான சம்பவத்தில் கொலைச் சந்தேக நபரான மீசாலையைச் சேர்நத லோகேஸ்வரன் (வயது-40) பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தலையில் ஏற்பட்ட காயத்துக்காக மந்திகை மருத்துவ மனையிலசிகிசசைக்கு அனுமதிக்கபட்டிருந்த போது அங்கு வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது அவரை எதிர்வரும் 21 திகதி வரை விளகக மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (த)

## தினசரி தியானம்

# உட்பார்வை

உங்களுக்குள்ளேயே உங்கள் பார்வை செல்லட்டும் உள்ளுக்குள் செலுத்தும் உட்பார்வையால் அன்பைக் கண்டுபிடியுங்கள் அல்லது தேடுங்கள். நம்பிக்கையுடனும் உறுதியுடனும் இதனைத்தொடர்ந்து செய்யுங்கள் உள்ளே உள்ள புட்களையும் புதர்களையும் கண்டறிந்து கூர்மையான மதியால் அவற்றைக் களைந்தெறியுங்கள். பரந்தாமன் உறையும் உங்களது இதயமாகிய பூந்தோட்டத்தில் அவைகளுக்கு இடமில்லை. அகிலாண்டநாயகனான இறைவனை உங்கள் மனக்கோயிலில் வரவேற்க இதயத்தை தூய்மைப் படுத்தி வையுங்கள்.

சுவாமி சிவானந்தர்

# மினிபஸ் விபத்தில் 8 பேர் படுகாயம்

(தம்பசிட்டி)

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் விபத்துக்குள்ளானதில் எட்டு பொதுமக்கள் படுகாயமடைந்து, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று நண்பகல் 12மணியளவில் நெல்லியடியில் இடம்பெற்றது.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த மினிபஸ் நெல்லியடிச் சந்தியை அண்மித்த வேளை சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பம் ஒன்றுடன் மோதியதாலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தினபோது சிவராஜா, புஸ்பராசா, இரத்தினம், ரதீஸ்கரன், பாலகிருஸ்ணா, பாலேந்திரபவான், பிள்ளைநாதர் இராமணி, நாகமுத்து சரஸ்வதி ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். (இ-5-45)



நேற்றைய சத்திர சிகிச்சையின் போது மரணமாகிய, ஒட்டிப் பிறந்த ஈரானிய இரட்டைச் சகோதரிகள்

**தமிழ்ச்செல்வனுடன்...**

மக்கள் படும் துன்பங்கள் தொடர்பாக அங்குள்ள பொது அமைப்புக்களுடன் கலந்துரையாடி அவர்களது உண்மை நிலைகளையும் அறிய இச் சந்திப்பு ஒரு வாய்பாகவும் அமைந்துளளது எனக் குறிப்பிட்டார்.

பேச்சுவார்த்தைகளை முடித்துக் கொண்ட ஜோன்வெஸ்பேர்க் கிளிநொச்சியில் உள்ள சிரான் அலுவலகத்திற்குச் சென்று அதன் செயற்பாடுகள் தொடர்பாகவும் அறிந்து கொண்டார்.

இதனையடுத்து தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் இன்று கொழும்பு திரும்பி அரச தரப்புப் பிரதிநிதிகளைச் சந்தித்து தமிழ்ச்செல்வனுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தை குறித்து விளக்கமளிப்பார்கள் என்று தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

**இராணுவ...**

தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் அரசு தனது அதிருப்தியை வெளியிட்டு வந்துள்ளது.

இராணுவ புலனாய்வுத் துறை அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவர்களை மறைத்து வாழவைக்கும் எண்ணம் எதுவும் அரசுக்கு இல்லை.ஆனால் அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது என்றும் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கூறினார்.(ம)


## கணித வகுப்புக்கள்

தரம் 6 தொடக்கம் 11வரையான வகுப்புக்களுக்கு அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் கணித வகுப்புக்கள் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

தொடர்பு:
**ஜெ.கோகுலவாசன்**
99, அரசடி வீதி,
(யாழ்.இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில்)
யாழ்ப்பாணம.
(C/6378) T.P:071-2336710

## தேவை

மேற்படி [illegible] னத்திற்கு சமையலாட்கள் [illegible] தேவை
விரும்புவோர் நேரில் வரவும்
தொடர்பு:
**விஜய் கூல்பார் அன் சைவ உணவகம்
கே.கே.எஸ். வீதி,
தாவடி**
(c/6393) T.P.078-621383


# சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய வந்த இரண்டு சிறுவர்களை அவர்களது பெற்றோரிடம் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் ஒப்படைத்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சம்பூர் அரசியல்துறை அலுவலகத்தில் வைத்து, திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக், யுனிசெவ்அதிகாரிகள் முன்னிலையில் இரண்டு சிறுவர்களையும் அவர்களது பெற்றோரிடம் ஒப்படைத்தார் (பி-3)

**கைக்குண்டுடன்...**

வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை,ஊறுவிளைவிக்கும் ஆயுதம் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் மேற்படி இரு இளைஞர்களையும் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி அப்துல் கபூர் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இருவரையும் எதிர்வரும் 22-ந் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (இ-14)

# இராணுவக் காவலரண் முள்ளுக்கம்பியை பிடித்த மாணவனை மின் தாக்கியது

(யாழ்ப்பாணம்)

இராணுவக் காவலரணில் போடப்பட்டிருந்த முள்ளுக்கம்பியில் பிடித்த மாணவன் ஒருவனை மின்சாரம் தாக்கியது.

வேலணை துறையூரில் உள்ள ஐயனார் வித்தியாலயத்தில் ஆண்டு 5ல் கல்விபயிலும் அன்ரனி அஜந்தன் (வயது 10) என்ற மாணவனையே மின்சாரம் தாக்கியது. எனினும் அவன் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளான். நேற்று மதியம் பாடசாலை இடைவேளையின்போது பிரஸ்தாப மாணவன் தனது நண்பர்க்ளுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது முள்ளுக்கம்பியில் பிடித்துள்ளார். அதன்போது அவரை மின்சாரம் தாக்கியது. அவ்வாறான சம்பவம் ஒன்று 1999ம் ஆண்டு யூலை மாதம் 22ம் திகதி இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தின் போது வேலணை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் சிவயோகலிங்கம் என்பவர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அச்சம்பவம் இடம்பெற்ற இடத்திலேயே நேற்றைய சம்பவமும் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. புரிந்துணர்வு ஒப்பந்தம் அமுலில் இருக்கும் சூழ்நிலையில் இராணுவம் தனது பாதுகாப்பு வேலிகளிற்கு மின்சாரத்தைப் பாய்ச்சு வது குறித்து அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ந-5)

# காவலாளிகள் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியின் உபதலைவர் த.சுபத்திரன் சுட்டுக் கொல்லசெய்யப்பட்ட சம்பவத்தை அடுத்து, கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்கும் வேம்படி மகளிர் கல்லூரி காவலாளிகள் இருவரும் தலா 2இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

யாழ். மேல்நீதிமன்ற நீதிபதி சி.தவராஜா மேற்படி இருவரையும் பிணையில் விடுதலை செய்ளவதற்கான உத்தரவை நேற்றுப் பிறப்பித்தார்.

சந்தேக நபர்கள் சார்பில் யாழ். மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனுக்கோரிக்கையை ஆராய்ந்த நீதிவான் பிணைக்கான உத்தரவை வழங்கினார். (த-4)

# கரம்பன் துறையிலிருந்து நயினைக்கு படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு இன்றிலிருந்து கரம்பன் கண்ணகை அம்மன் துறைமுகத்தில் இருந்து பயணிகள் படகுச் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நயினாதீவிற்குச் செல்லும் பக்தர்கள் காலை 9மணிக்கு மேற்படி துறைமுகத்தில் இருந்து தமது பயணத்தை மேற்கொள்ளலாம். (ந-5)

**மோப்ப...**

கட்டடத்தினுள் ஒரு குண்டு வீசப்பட்டது.அப்போது ஒரு எம்.பி கொல்லப்பட்டிருந்தார் சிலர் காயமடைந்திருந்தனர்.அப்போது ஜே.வி.பியின் கிளர்ச்சிகள் நாட்டில் நடைபெற்று வந்தன.

இதேவேளை செய்தியாளர் மத்தியில் பேசிய அமைச்சர் லொக்கு பண்டார ஒரு கட்சியின் தலைவருக்கு எதிராக தாக்குதல் ஒன்றுநடத்தப்படக்கூடும் என்று வதந்திகள் அடிபடுவதாகத் தெரிவித்தார். (த)

# யு.என்.எச்.சி.ஆர்.-புலிகள் மட்டக்களப்பில் சந்திப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கரடியனாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகளிற்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்துள்ள மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இக்கலந்துரையாடலில் புலிகள் தரப்பில் சிறப்புத் தளபதி ரமேஸ், மட்டு அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் ஆகியோரும் யு.என்.சி.ஆர் தரப்பில் செல்வி ஆயூசி பெற்றோவும் கலந்துகொண்டனர். (த-14)

# மர்மப் பொருள் வெடித்துக் காயம்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கையில் காயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று நண்பகல் குருநகர் பகுதியில் மர்மப் பொருள் ஒன்றை கையில் எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்த போது அது வெடித்ததாலேயே கையில் காயம் ஏற்பட்டதாக தெரியவருகிறது.

இச்சம்பவத்தில் செல்வின் என அழைக்கப்படும் சுகுணேஸ்வரன் (வயது 29) என்பவரே காயமடைந்தவராவார். (இ-5)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் உரிமைகள் தொடர்பாக மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரால் நடத்தப்பட்டு வருகின்ற தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு நிகழ்வாக சிறுவர் இல்ல உத்தியோகத்தர் மற்றும் பராமரிப்பாளர்களுக்காக முழு நாள் பயிற்சி நிகழ்வும் கலந்துரையாடலும் இன்று காலை 9.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

மேற்படி நிகழ்வில் அனைத்து யாழ் மாவட்ட சிறுவர் இல்ல உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்பு குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.(த)

**ஒட்டிப்பிறந்தவர்களை...**

மிகப்பெரிய மருத்துவர்கள் குழு, இவ் அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூர் நேரப்படி நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகிய அறுவைச் சிகிச்சை நேற்றுப் பிற்பகல் வரை தொடர்ந்து இடம்பெற்றது.

மருத்துவர் குழு கடும் பிரயத்தனத்துடன் தீவிர முயற்சியாக அறுவைச் சிகிச்சையில் ஈடுபட்ட போதும் சிகிச்சை தோல்வி அடைந்ததால் 90 நிமிட இடைவெளியில் ஒருவர் பின் ஒருவராக இருவரும் மரணமடைந்து உலகையே பெரும் சோகத்தில் ஆழ்த்தி உள்ளனர்.

தலைப்பகுதி ஒட்டிப் பிறந்த சகோதரிகளை வெட்டி பிரிக்க மேற்கொள்ளப்பட்ட அறுவைச்சிகிச்சையின் போது முதலில் மண்டையோட்டின் தோலை உரித்து ஒட்டி பிறந்த சகோதரிகளின் மண்டையோட்டை வெளியே தெரியும்படி செய்தனர்.

பின்னர் தலையின் முன்பக்கத்தில் ஆரம்பித்து பின்பகுதி வரை மண்டையோட்டின் எலும்பை வெட்டியெடுத்து, உள்ளே இருக்கும் மூளையும், இரத்தக் குழாய்களும் வெளியே தெரியும்படி செய்யப்பட்டது.

இவ் முதலாவது கட்ட அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் மிகவும் முக்கியமான அடுத்த கட்ட அறுவைச் சிகிச்சை ஆரம்பமானதென்று வைத்தியர் குழுவின் தலைமை வைத்திய நிபுணர் ஹேத்கே தெரிவித்தார்.

இதன்போது ஒட்டியிருக்கும் இருவரது மூளைகளையும் தனித்தனியாக வெட்டிப்பிரிக்க வேண்டிய மிகப்பிரதானமான அறுவைச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வறுவைச் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டு இறுதிக்கட்டத்தில் மிகப் பெரிய அளவில் இரத்தப்பெருக்கு ஏற்பட்டது இதனை நிறுத்த வைத்தியர் குழு கடும் பிரயத்தனத்துடன் முயன்ற போதும், அம்முயற்சி தோல்வியடைந்ததால், இரு சகோதரிகளும் மிகவும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் என்று வைத்திய நிபுணர் கவலையுடன் கூறினார்.

ஈரானில் மிகவும் பிரபலம் பெற்று விளங்கிய இச் சகோதரிகள் அறுவைச் சிகிச்சைகள் நல்லபடியாக நடைபெற்று, இருவரும் நலமே வாழவேண்டும் என ஈரானிய அதிபர் முகமட் ததாமி, சகோதரிகளின் உறவினர்கள், வைத்திய நிபுணர்களின் குடும்பங்கள் மற்றும் மனிதநேய உள்ளங்கள் கடும் பிரார்த்தனையில் ஈடுபட்ட போதும், தெய்வசக்தியின் முன் மனித சக்தி தோல்வி கண்டுவிட்டதாகவே விஞ்ஞான உலகினர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மிகவும் ஆரோக்கியமாக 29 வருடங்கள் வாழ்ந்த இவ் இரட்டைச் சகோதரிகள் மிகவும் கலகலப்பாகவும் அன்பாகவும் பழகும் சுபாவம் கொண்டவர்கள்.

இருவரும் சட்டக் கல்லூரியில் உயர்கல்வி பெற்றவர்கள். சகோதரி லாதேன் வழக்கறிஞராக வர வேண்டும் என்ற விருப்புடையவர் ஆனால் லாலேக்கு ஒரு பத்திரிகையாளராக வேண்டும் என்பதே விருப்பமாகும்.

எனினும் தலையால் ஒட்டியிருப்பதால் இரு சகோதரிகளும் தங்கள் தங்கள் தனித்தனி விருப்பங்களை நிறைவேற்ற முடியாமல் சகோதரி லாதேனின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் இருவரும் சட்டம் பயின்றுள்ளனர்.

இவர்களது மரணச் செய்தி வெளியானதும் உலகெங்கும் பெரும் சோகம் பரவியது. (இ)


## விற்பனையாளர்கள் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் இயங்கும் பான்சிக் கடைக்கு விற்பனையாளர்கள் தேவை சுயவிபரததுடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவர்:
**விளம்பர இல-388
மே/பா, வலம்புரி,
யாழ்ப்பாணம்**
(7246)

## உவகையுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



மண்டைதீவு முன்னாள் கிராமோதய சபை, இணக்கசபை உறுப்பினரும், கிராமமுன்னேற்றச் சங்கம் மற்றும் உதயசூரியன் சனசமூகநிலைய செயலாளரும், தற்போதைய கண்ணகை அம்மன், முத்துமாரியம்மன் பரிபாலன சபை செயலாளரும், வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உப தலைவரு மாகிய

**திரு. அருளானந்தம் ஸ்ரீபத்மராசா**

அவர்கள் மாவட்ட நீதிபதி உயர்திரு.இ.த.விக்னராஜா அவர்களது முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்றுள்ளதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வட்டாரம் 6,
மண்டைதீவு.

ஆ.சச்சிதானந்தபிள்ளை
ஆ.ஏகானந்தசிவம்


## 5-ம் தர புலமைப்பரீட்சை வினாத்தாள்-24

மாணவர் முழுப்பெயர்..................................................
பாடசாலையின் பெயர்..................................................
வீட்டின் முகவரி..................................................
மாணவர்களே! உங்கள் விடைகளை16.07.2003க்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் இக்கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி
கல்விப் பகுதி
15,வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.**

குறிப்பு:- மாணவர்களின் நலன் கருதி இவ்வினாத்தாளை வைத்துக்கொண்டு வினாக்களுக்கான விடைகளை மட்டும் வேறு ஒரு தாளில் எழுதிக் கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களைச் சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.